DANGER

# பிராமண மந்திர பூசைகள்

# சாமிஜி

காஞ்சிப்பெரியவர்
ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
கருத்துக்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

# DANGER

# பிராமண மந்திர பூசைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிராமண மந்திர பூசைகள்

*"சாமிஜி"*

*விற்பனை உரிமை:*

**சூரியகாந்தி**

*138,* ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

தொலைபேசி: *021 – 222 2365*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிராமண மந்திர பூசைகள்

முதற்பதிப்பு : **நவம்பர் 2007**

ஆசிரியர் : ***"சாமிஜி"***

© : **உரிமை பதிவு**

வெளியீடு : **சைவ சித்தாந்த தமிழ் நிலையம்**
**68/1, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.**

*Title* : ***Brahmana Manthira Poosaikal***

*First Edition* : Nov. 2007

*Author* : ***S. Kumarasamy*** *B.Sc. Dip in Ed.*

*Publisher* : ***Saiva Siddhantha Tamil Center***
***68/1, Rasavinthoddam Road, Jaffna.***

*Price* : ***Sri Lanka – Rs. 150/=***
***India – Rs. 150/=***
***Other Countries – U.S. dollars $ 100/=***

*Printed at* : ***Ramyas, Manipay.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நமது வாழ்க்கையில் பிராமண மந்திர பூசைகள் முக்கியமான ஓர் இடத்தைப் பிடித்துள்ளன.

பிராமணன் ஆசாரம் பற்றியும் மந்திர பூசைகள் பற்றியும் ஒரு சிறிதாவது நமக்குத் தெரியவேண்டும்.

அதற்குத் துணை செய்வது இந்நூல்.

பிராமண மந்திர பூசைகள் பற்றிய பல சங்கதிகள் நமக்குத் தெரியாத காரணத்தினாலே ——

கெட்ட பல விளைவுகளுக்கு நாம் ஆளாக வேண்டி இருக்கிறது! ஆசாரம் விட்ட பிராமணனாலும் தப்பாகச் சொல்லப்படும் மந்திரங்களாலும் மிகப்பெரும் கேடுகள் வந்து சேரும் என்பது சாஸ்திரங்களே சொல்லும் உண்மை!

நமது மக்களிலே பெரும்பாலோர் பின்பற்றும் மதத்துக்குப் பெயர் இந்துமதம்!

சைவ சமயிகள் என்று பெயரளவிலே சொல்லிக் கொண்டாலும் உண்மையில் இந்துமதத்தைப் பின்பற்றுகின்றவர்களாகவே நாம் இருக்கின்றோம்.

இந்து மதத்துக்கு இன்னொரு பெயர் பிராமண மதம்!

வரலாற்றில் நீண்ட நெடுங்காலமாக அப்படித்தான் அழைக்கப் பட்டு வந்திருக்கின்றது. இஸ்லாமியரும் மற்றும் சில மேல்நாட்ட வரும் சூட்டிய பெயர்தான் இந்துமதம் என்பது!

பிராமண மதத்தைக்கூட அந்த மதத்துக்குரிய சாஸ்திரங்கள் சொல்லுகின்ற சரியான முறையிலே நாம் பின்பற்றுவது இல்லை.

நாம் மட்டுமல்ல ——

பிராமணமத பூசாரிகளேகூட பிராமணமத சாஸ்த்திரங்கள் சொல்லுகின்ற முறைப்படி நடப்பதாகத் தெரியவில்லை.

"வயிறு வளர்க்கும் பிராமணப் பூசாரிகள் மதம்" தான் இப்போது கொடிகட்டிப் பறக்கிறது!

சைவம் வேறு பிராமணமதம் வேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணமதம் வேறு, வயிறு வளர்க்கும் பிராமணப் பூசாரிகள் மதம் வேறு!

சைவத்தை பின்பற்றுவதாக நினைத்துக்கொண்டு —

பிராமணமத பிரச்சாரகர்களின் கதை அளப்புக்களிலே மயக்கம் கொண்டு —

வயிறு வளர்க்கும் பிராமணப் பூசாரிகளின் வழிகாட்டலில் நடப்பதாகவே —

நம்மில் பலரின் சமயவாழ்வு நடந்து வருகிறது!

சைவம் அறிவோடு தொடர்புடையது.

அறிவு வளர வளர சைவம் வளரும்.

சைவம் வளர வளர அறிவு வளரும்.

சைவம் தமிழோடு தொடர்புடையது. எங்கு தமிழ் இல்லையோ அங்கு சைவமும் இல்லை.

மக்களின் அறியாமையை மூலதனமாகக் கொண்டு வளர்வது பிராமணமதம்.

உண்மைப் பிராமணமதம் காலப்போக்கில் வயிறு வளர்க்கும் பிராமணப் பூசாரிகள் மதமாக மாற்றம் அடைவது அதன் இயல்பிலேயே அமைந்து கிடக்கும் மாற்றமுடியாத ஒரு தன்மை!

நம்முடைய மக்களிலே பலர் பிராமண மதத்தைப் பின்பற்றுவதற்குக் காரணம் அவர்களின் அறியாமை!

குறிப்பாக —

பிராமண மதத்தின் அடிப்படையான உண்மைகளைத் தெரிந்து கொள்ளாத அறியாமை!

இந்த நூலிலே —

காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்களின் கருத்துக்களைத் தொகுத்துத் தந்திருப்பதன் மூலம் —

மக்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய சில அடிப்படையான பிராமணமதக் கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமண மதத்தைப்பற்றி அந்த மதத்தின் சாஸ்திரங்களே சொல்லுகின்ற சரியான நடைமுறைகளையும் கருத்துக்களையும் இன்னும் நிறையத் தர முடியும்.

அச்சுக்கூலியும் தாள்விலையும் கைகளைக் கட்டிப் போடுகின்ற காரணத்தால் சுருக்கமாகவே தரவேண்டி இருக்கிறது.

சுருக்கமாகத் தரப்பட்டிருப்பினும் ——

விஷயத் தெளிவுக்கும், சிந்தித்து ஒரு தெளிவான முடிவுக்கு வருவதற்கும், அபத்தமான பிராமணப் பூசாரிகளின் வயிற்றுப் பிழைப்பு மந்திர பூசைகளினால் வரக்கூடிய தோஷங்களிலிருந் தும் ஆபத்துக்களிலிருந்தும் மக்கள் தப்பித்துக் கொள்வதற்கும் இவை போதும்!

'சனிதோஷம்' 'செவ்வாய் தோஷம்' 'கிரக தோஷம்' "நாக தோஷம்" "மாங்கல்ய தோஷம்" "மனை தோஷம்" என்று இப்படி எத்தனையோ தோஷங்களைப் பற்றிச் சொல்வதோடு ——

அவற்றுக்கான நிவாரணங்களையும் காசுக்ககுத் தகுந்த மாதிரி "ரெடிமேட்"டாக வைத்திருக்கிற வயிறு வளர்க்கும் நமது பிராமணப் பூசாரிகள் ——

பிராமணமத சாஸ்திரங்களே சொல்லுகின்ற ——

"ஆசார தோஷம்" "மந்திர தோஷம்" "திரவிய தோஷம்" என்ற இப்படியான தோஷங்களைப் பற்றி மூச்சுக்கூட விடுவதில்லை!

எல்லா தோஷங்களையும் விட ——

"ஆசார தோஷம்" "மந்திர தோஷம்"<br>
என்பவையே மிகவும் கெடுதியான<br>
அதிபயங்கர ஆபத்துக்களைக்<br>
கொண்டு வருபவை!<br>
பிராமண மந்திர பூசைகளில்<br>
ஏற்படுகின்ற தவறுகளினாலேயே<br>
விளைகினற தோஷங்கள் இவை!

நோய் வந்துவிட்டால் மருந்து எடுக்கின்றோம்.

சில சமயங்களில் ——



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எடுக்கும் மருந்தே மோசமான பல பெருவியாதிகளுக்குக் காரணமாகி விடுகிறது.*

*இதனாலேதான் —*

*மருந்து எடுக்கும்போது —*

*"குவாலிபைட் டாக்ட"ரிடம் காட்டித்தான் மருந்து எடுக்க வேண்டும் என்பது!*

*"குவாலிபைட் டாக்டர்" ஆவது எளிதான காரியம் அல்ல! நல்ல டாக்டர் ஆவதற்கு தகுந்த கல்வியும் நிறைந்த பயிற்சியும் வேண்டும்! அதனோடு கூடவே செய்யும் தொழிலில் அர்ப்பணிப்பும் வேண்டும்!*

*"மருந்து"களைக் கையாள்வதைவிட —*

*"மந்திர"ங்களைக் கையாள்வதற்கு —*

*கூடிய கல்வியும் பயிற்சியும் தேவையாக இருப்பதோடு சரியான ஆசாரமும், அவதானமும், மிகுந்த அர்ப்பணிப்பும், தவமும் வேண்டும்!*

*அப்படி இல்லாவிடின் —*

*"மந்திர தோஷம்" போன்றவற்றால்*
*தனிமனிதனும், ஊரும், நாடும்,*
*உலகமும் மிகப்பெரிய அவலங்களைச்*
*சந்தித்து நாசமாக வேண்டியதுதான்!*
*அதுதான் இப்போது நடந்து கொண்டு*
*இருக்கிறது!*

***பிராமணமத சாஸ்திரங்களே மிகவும் அழுத்தமாகச் சொல்லும் உண்மை இது.***

*இப்போது நாம் சந்திக்கின்ற*
*தனிமனித அவலங்களுக்கும்*
*பொதுவான ஊர்ப் பிரச்சினைகள்*
*நாட்டுப் பிரச்சினைகள் என்பவற்றுக்கும்*
*நடைமுறையில் உள்ள*
*பிராமண மந்திர பூசைகளே*
*காரணமாக உள்ளன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணனுக்குத் தேவையான ஆசாரங்களையும் வாழ்க்கை முறையையும் கடைப்பிடிக்காமல் தூக்கி வீசிவிட்டு —

பிராமணனைப் பிராமணன் ஆக்குவதற்காக சாஸ்திர சடங்கு களோடு வைக்கப்பட்ட குடுமியையும் வெட்டி எறிந்துவிட்டு —

அட்சர சுத்தம் இல்லாமலும் அர்த்தம் புரியாமலும் அள்ளித் தெளித்த கோலமாக தப்புத்தப்பாக மந்திரம் சொல்கிறவனாக —

பூணூலை மட்டும் மாட்டிக் கொண்டவனாக —

இருக்கின்ற பிராமணப் பூசாரி —

மந்திரம் சொல்லிப் பூசைகள் செய்தால் —

கேடுகள் எல்லாமே தப்பாமல் தேடி வரும்!

நூல் முழுவதையும் நின்று நிதானித்து ஆழ்ந்து படித்துப் பாருங்கள். நான் சொல்வதன் உண்மை விளங்கும்!

நான் இதற்கு முன்னர் எழுதி வெளியிட்ட 'இது இந்துமதம்', "கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்" என்ற இரு நூல்களுட னும் ஒருங்குவைத்து நோக்க வேண்டியதே இந்நூலாகும்.

சாதாரண மக்கள் மத்தியிலேயும், படித்த அறிஞர் மத்தியிலே யும் எனது நூல்களுக்கு கிடைத்து வரும் நல்ல ஆதரவு எனக்குப் புதிய உற்சாகத்தை நிறையத் தருகிறது. எல்லாருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்!

கணனி வடிவமைப்பு, புத்தக அச்சமைப்பு ஆகியவற்றை பொறுப்போடு திருப்தியான முறையில் செய்துதந்த இளைஞர் ரவிக்கு எனது விசேட நன்றிகள்.

138, ராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
01.11.2007

- சாமீஜீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஞ்சிப் பெரியவர்
# ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள்

"காஞ்சிப் பெரியவர்" என்று சொன்னவுடன் காஞ்சி சங்கரமட மடாதிபதியாக இருந்த "ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்" அவர்களையே உலகம் கருதுகின்றது.

அந்த அளவுக்கு புகழோடு வாழ்ந்தவர்.

பல மொழிகள் தெரிந்தவர் பல துறைகளிலே நிரம்பிய அறிவு பெற்றவர் மிகப்பெரிய ஞானி.

இவர் நூற்றியொரு ஆண்டுகள் உயிர் வாழ்ந்தவர். நோய் நொடியில்லாமல் நல்ல உடல்நலத்துடன் வாழ்ந்தவர்.

அதுவே ஓர் அற்புதமான காவியமான வரலாறு.

சமயம், அரசியல், தத்துவம், விஞ்ஞானம், வரலாறு, சங்கீதம், இலக்கியம், இலக்கணம் ஆதியாம் பல துறைகளிலே வியக்கத்தக்க புலமை மிகுந்து நடமாடும் பல்கலைக்கழகமாகவே வாழ்ந்தவர்.

ஆசார நியமங்கள் தப்பாது ஒழுக்கசீலராக வாழ்ந்து தெய்வ அவதாரமாகவே பலராலும் மதிக்கப்பட்டவர்.

வடமொழி வேதங்கள் மிகவும் உயர்வானவை என்பதும், சமஸ்கிருதம் தெய்வ பாஷை என்பதும், புராணங்கள் எல்லாமே உண்மையாக நடைபெற்ற நிகழ்வுகளின் தொகுப்புக்களே என்பதும், பிராமணன் தனக்கு விதிக்கப்பட்ட சாஸ்திர ஆசாரங்களின்படி ஒழுக்கத்துடன் வாழ்ந்து வேதங்களைக் காக்கவேண்டிய பொறுப்பு உள்ளவன் என்பதும் இவரது நம்பிக்கைக்குரிய கருத்துக்கள் ஆகும்.

வேதக் கடலைக் கரைகண்டு உணர்ந்த மேதையாகவும், பழைய சம்பிரதாயங்களின் உறைவிடமாகவும், பழுத்த ஞானியாகவும் 'பிராமண மதம்' தழைத்து ஓங்கவேண்டும் என்பதில் பெரு விருப்பம் கொண்டவராகவும், வாழ்நாள் முழுவதும் அதற்காகவே உழைத்தவராகவும் பெருமையோடு கொண்டாடப்படும் இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபந்நியாசங்கள் பல தொகுக்கப்பட்டு நல்லபல நூல்களாக வெளிவந்திருக்கின்றன.

"தெய்வத்தின் குரல்", "ஆச்சாரிய ஸ்வாமிகள் உபந்நியாசங் கள்", "அருள் உரை" என்று பலபல நூல்கள் பலபல தொகுதி களாக வெளிவந்திருக்கின்றன.

'விகடன்' வெளியீடாக "அருள் உரை" என்ற பெயரில் நூற்றியொரு நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

அந்த 'அருள் உரை' நூல்களிலிருந்து இவர் சொல்லியுள்ள சில கருத்துக்களை அடுத்துள்ள பக்கங்களிலே தந்திருக் கின்றேன்.

அங்கே அடைப்புக்குறிக்குள் சில எண்கள் குறிக்கப்பட்டிருக் கின்றன.

உதாரணமாக ஒரு விஷயத்தின் இறுதியில் (37/12) என்று குறிக்கப்பட்டிருந்தால் அது 37வது 'அருள் உரை' நூலின் 12வது பக்கத்தில் இருக்கின்றது என்று அர்த்தம்.

ஆச்சாரிய ஸ்வாமிகள் 'பிராமண மதம்' தொடர்புடைய பல்வேறு விஷயங்களைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதை படியுங்கள்.


கொஞ்சம் நின்று நிதானித்து ஆறுதலாகவே படியுங்கள்.

- "சாமிஜி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காஞ்சிப்பெரியவர்

# ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

# கருத்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (I) சாஸ்திரங்கள்

1) ஆத்மார்த்தமான சத்தியங்கள் எந்நாளும் மாறுவதில்லை. மாறுகிற சமூகத்தை அந்த மாறாத சத்தியத்தில் நிலைப் படுத்துவதற்காக சாஸ்திரங்கள் விதித்த நியதிகளும் மாறா தவையே. *(5/33)*

2) சாஸ்திரம் என்றால் பூரணமாக சாஸ்திரத்தை ஒப்புக்கொள் வதாக இருக்கவேண்டும். அல்லது சாஸ்திரம் வேண்டாம் என்று முழுக்க **நாஸ்திகனாக** இருந்துவிடவேண்டும். அப்படி யில்லாமல் நமது புத்திசாலித்தனத்தைக் காட்டி சாஸ்திரத்தை நம் இஷ்டப்படி வளைத்துச் சிலதை எடுத்துக்கொள்வது, சிலதை விடுவது, சிலதை மாற்றுவது என்றால் **அது நாஸ்திகத்தைவிடப் பாபகரமானது.** வேதமாதா நம் இஷ்டப்படி இழுத்த இழுப்புக்கு வரவேண்டும் என்று நினைப்பது பெரிய தோஷம். *(37/7)*

3) சாஸ்திரத்தை நம்ப வேண்டுமென்றால் அப்புறம் ஆர்க்யூமெண் டுக்கு வால்யூ இல்லை. ஆர்கியூமெண்டில் எத்தனை நியாயம் தெரிந்தாலும் சரி சாஸ்திரம் சொல்லுகிறதென்றால் அதில்தான் நமக்கு தெரியாத, புரியாத நியாயம் இருக்க வேண்டும் என்று ஒப்புக்கொண்டு அதன்படி தான் செய்ய வேண்டும். நம்பிக்கை **(Faith)** என்னும்போது அது புத்தியால் மட்டும் புரிந்து கொள்ளக்கூடியதல்ல என்றுதானே அர்த்தம். *(47/20)*

4) நாம் சாஸ்திரங்களுக்கு அடங்கி அடிபணிந்து அதன் பிரகாரம் தான் செய்யவேண்டும். *(48/28)*

5) சாஸ்திரத்தில் சொல்லியிருக்கின்ற ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்றை 'ஸ்ப்ஸ்டிட்யூட்' பண்ணக்கூடாது. *(49/29)*

6) சாஸ்திரங்களில் அது போடுகிற விதிக்கு மாறாக அதுவே விலக்குத் தருகிற இடத்தில் மட்டும்தான் நாமும் விலகிப் போகலாம் மற்றப்படி மூலப்படிதான் செய்ய வேண்டும். *(49/39)*

7) வருண ஜபம் பலிக்காத பல இடங்களில் நான் விசாரித்ததில் 'அலவண நியமம்' - அதாவது ஜபம் செய்கிறவர்கள் உப்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்துக்கொள்ளக்கூடாது என்கிற விதி சரியாக அனுஷ்டிக் கப்படவில்லை என்று தெரிந்துகொண்டிருக்கிறேன். (4/48)

8) சாஸ்திரப்பிரகாரம் ஸ்வாமியின் **சாந்நித்தியத்தைக்** கிரகித்துத் தரும் கோயில்களில், அந்த சாஸ்திரங்கள் சொன்ன விதிப்படி தான் ஸ்வாமியைத் தரிசிக்கவேண்டும். இந்த விதிகளை மீறுவதால்தான் மஹாக்ஷேத்திரங்களில் **விபத்து விபரீதம்** எல்லாம் ஏற்படுகின்றன என்பது என் அபிப்பிராயம். (9/45)

9) ஸ்ரீசக்ர பூஜையில் கொஞ்சம் தப்பு ஏற்பட்டு விட்டால்கூட என்னென்னவோ கெடுதல் ஏற்பட்டு விடுகிறது. (60/4)

10) வேதங்களை **சிலபேர்தான்** ரொம்பவும் நியம ஆசாரங்க ளோடு ரக்ஷிக்க முடியும். (11/3)

## (II) மந்திரங்கள்

1) எந்த சப்தங்கள் சகல பிராணிகளுக்கும் இகபர நலன்களைத் தருமோ அவையே வேதங்களில் உள்ள மந்திரங்கள். (4/46)

2) ஒரு **சின்னஞ்சிறிய அணுவைப் பிளப்பதனால் பிறக்கும் சக்தியைவிட** ஸகல ஸ்ருஷ்டிக்கும் பீஜமான **மந்திர சப்தங்களைப் பிளப்பதில் உண்டாகும் சக்தி எவ்வளவோ அதிகமாகும்.** (54/45)

3) ஓர் எழுத்தை நாம் உச்சரிக்கும்போது நமது நாக்கு, உதடு, மேல்வாய், கீழ்வாய், கண்டம் முதலியவற்றின் இடைவெளி வழியாக ப்ராணவாயு வெளிப்படுகிறது. அப்பொழுதுதான் அக்ஷரத்வனி உண்டாகிறது. அந்த அக்ஷரத்வனிக்குக் காரண மாக எந்தெந்த உறுப்புக்களில் ப்ராணவாயு சஞ்சரிக்கிறதோ அந்தந்த இடம் ஸம்பந்தப்படும் நாடிகளில் சலனத்தினால் மனஸில் எந்த விதமான விருத்திகள் ஏற்பட்டு இகலோக க்ஷேமமும் பரலோக க்ஷேமமாகிற மோக்ஷம் முதலிய புண்யமும் ஏற்பட வேண்டுமோ, அதற்கு **அனுகுணமாக** உள்ள உச்சாரணங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு வேறுவிதமான உச்சாரணங்களை விலக்கி அமைந்தனவே வேத மந்திரங்கள். (22/28)

4) ஒவ்வொரு விதமான சப்தத்துக்கும் ஒவ்வொரு விதமான சக்தி உண்டு. (4/46)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) சில சப்தங்ளுக்கே நல்லது செய்யும் சக்தி உண்டு. (71/8)

6) ரிஷிகளுக்கு லோக ஸ்ருஷ்டியில் ஏற்படும் சகல சலனங்களும் அதாவது பரமாத்மாவின் ச்வாஸகதிகளும் தெரிந்தது. தெரிந்தது மட்டுமில்லை மின்சார அலையை சப்த அலைகளாகப் Convert பண்ணுவது போல, அந்தச் சலனங்களுக்குரிய சப்தங்கள் மனுஷ்யக் காதுக்கு எட்டுகிற சப்தங்களாகவும் அவர்களுக்குத் தெரிந்தன. அப்படிப்பட்ட சப்தங்களையே வேத மந்திரங்கள் என்று தந்திருக்கிறார்கள். (22/3)

7) அவை சப்தங்களாக இருக்கிறபோதே, அந்தந்த சப்தங்களுக்குரிய **தேவதா ரூபங்களாகவும்** இருந்து அந்தத் தேவதையின் சாக்ஷாத்காரத்தையும் அனுக்கிரகத்தையும் நமக்கு ஏற்படுத்தி வைக்கின்றன. (4/44)

8) ஒவ்வொரு ரூபத்தையும் பிரத்தியக்ஷமாகத் தரிசனம் செய்ய வேண்டுமானால் அதற்கு உபாயமாக ஒவ்வொரு மந்திரம் இருக்கிறது. (15/46)

9) சில சப்த கோவைகளை விடாமல் ஜபம் செய்கிறபோது அவற்றிற்குரிய ரூபங்களும் பிரத்தியக்ஷமாகின்றன. (15/47)

10) இந்த வேத மந்திரங்களில் விசேஷம் என்னவென்றால் அர்த்தம் இல்லாமல் வெறும் சப்த ரூபத்திலேயே அவை லோக க்ஷேமத்தைச் செய்கின்றன. ஆனால் இது மட்டுமில்லை அவற்றுக்கு உயர்ந்த அர்த்தமும் இருக்கிறது. (4/44)

11) பல மந்த்ரங்களில் அர்த்தத்தைவிட சப்தத்துக்கு முக்கியத்துவம் அதிகம்! அவற்றில் **அக்ஷரத்துக்கும்** அவற்றைச் சொல்ல வேண்டிய ஸ்வரத்துக்கும் விசேஷ சக்தி உண்டு. (4/46)

12) வேத சப்தங்கள் வெளிச்சூழலில் (Atmosphere) பரவிக் கொண்டிருப்பதனாலேயே லோகத்தில் பரம மங்களம் உண்டாகும். அப்படிப்பட்ட சக்தி அந்த மந்திரங்களுக்கு இருக்கிறது. (5/4)

13) வேதம் ஏன் இருக்கவேண்டும் என்றால் முதலில் அந்த மந்திர சப்தம் அதிலுள்ள யக்ஞாதி கர்மாக்கள் லோகத்தில் இருந்து கொண்டிருந்தாலே சகலருக்கும் பெரிய க்ஷேமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் மழை தன தானிய சுபிக்ஷம் உண்டாவதோடு ஜனங்களின் எண்ணங்களும் சுத்தமானதாக ஆகும். (5/28)

14) எல்லா மந்திரங்களையும் நாம் புத்தி பூர்வமாக அக்ஷரங்களைக் கொண்டு ஜபிக்கிறோம். அந்த மந்திர சப்தங்களின் அதிர்வினால் நாடியில் ஏற்படும் சலனங்களிலிருந்து அபூர்வமான தரிசனம், சக்தி, ஸித்தி, மனத்தெளிவு ஆகியன உண்டாகின்றன. இவை பூர்ணமாக ஏற்படுவதற்கு பிராணாயாக பூர்வமாக, அதாவது தீர்க்கமாக மூச்சை இழுத்து அடக்கி வெளியிடுவதோடு சேர்த்துப் பண்ணவேண்டும். (95/4)

15) மந்திரங்களைச் சொல்லும்போது **பரிபூர்ண அக்ஷர சுத்தமிருக்க வேண்டும்.** ஏனென்றால் கண்டம் போலத் தோன்றினாலும் இந்த மந்திரங்கள் அகண்ட ஆகாச சப்தத்திலிருந்தே ரிஷிகள் திவ்ய சிரோத்திரத்தில் கேட்கப்பட்டு அவர்களால் நமக்கு தரப்பட்டவையாகும். அவற்றை உள்ளபடி Perfeet ஆக உச்சரிப்பதால்தான் அந்த அகண்ட சக்தியின் பலனை அடையமுடியும். (50/47)

16) ஒரு ஒலியை எப்படிச் சொன்னாலும் பலன் தந்து விடாது. சிலவற்றை உயர்த்த வேண்டும், சிலவற்றைத் தாழ்த்த வேண்டும். சிலவற்றைச் சமமாகச் சொல்லவேண்டும். அப்போது தான் பலன் கிடைக்கும். வேதத்தை **இப்படி மூன்றுவித ஸ்வரங்களில் சொன்னாலே** பலிதமாகும். இவற்றை உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் என்று சொல்வார்கள். **சப்தம், ஸ்வரம்** இரண்டுமாகச் சேர்ந்து பிரபஞ்ச சக்திகளை நமக்கு அனுகூலமாக்கி தருகின்றன. (5/4)

17) ஏதோ அவ்வப்போது படிப்பது என்பதாக ஒருத்தனுடைய மனஸின் வெளி லெவலோடு மந்திரங்களை நிறுத்தி விட்டால் அவற்றின் பூர்ண பிரயோஜனம் உண்டாகவே உண்டாகாது. **மந்த்ரங்கள், ஒருவனுடைய மனஸ் பூராவையும் வ்யாபித்து அவனுடைய உயிரிலே இறங்கி ஊறியிருக்க வேண்டும். அப்போதுதான் அவன் சொல்லும் மந்ரம் பூர்ணமாக வீரியமாக இருக்கும்.** (61/35)

18) **நல்ல காரியம், கெட்ட காரியம்** எல்லாவற்றுக்கும் ஒவ்வொரு **சலனம், சப்தம்** இருக்கிறது. இந்த சப்தத்தை உண்டாக்கி விட்டால் அந்த நல்லதும் அல்லது கெட்டதும் வந்துதான் ஆகவேண்டும் (சப்தத்தால் சலனம் உண்டாகிறது. அப்புறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலனத்தால் காரியம் உண்டாகிறது என்ற கருத்து இங்கே சொல்லப்படுகிறது.) நல்லெண்ணங்கள் ஜனங்களுக்கு உண்டாகிறது என்றால் அப்படி உண்டாக்குகிற சலனங்கள் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட சப்தங்களை நாம் உண்டாக்க முடியுமானால் லோகத்தில் ஜனங்களுக்கு நல்ல எண்ணங்கள் தோன்றிக்கொண்டே இருக்கும். ஜனங்களுக்கு உயர்ந்த எண்ணங்கள் இருப்பதைவிட லோகத்துக்கு பெரிய க்ஷேமம் என்ன இருக்கிறது? அப்படி எண்ணுவதற்கு அவர்களைத் தூண்டுகிற சக்தியைப் பெற்ற சப்தங்கள்தான் வேத மந்ரங்கள். (4/40)

19) ஜனங்கள் ஜீவிப்பதற்கு ஆகாரம் அவசியம். லோகத்தில் ஒரு மேகம் உண்டாகிறது. அது மழையாகப் பெய்கிறது என்றால், இந்தக் காரியங்கள் அநேக விதமான சலனங்கள் மீதே நடந்திருக்கிறது. எனில் சில சப்தங்களை உண்டாக்கி அதன் மூலம் இப்படிப்பட்ட சலனங்களை ஏற்படுத்திவிட்டால் மழை பெய்யத்தான் வேண்டும். இப்படியே வாழ்க்கைக்கு அவசியமானவற்றையெல்லாம் சப்தங்கள் மூலம் உண்டாக்கிக் கொள்ளலாம். (4/41)

20) உச்சாரணம் சுத்தமாக இருந்தால்தான் அக்ஷரங்கள் பலன் தரும். **சப்தங்களுக்கே இப்படி சக்தி இருப்பதைப் புரிந்து கொண்டோமானால்,** அப்புறம் எந்த மந்திரம் எந்த பாஷை யில் இருக்கிறது? **பாஷையை மாற்றலாமா என்ற யோசனை கள் எழும்பாது.** (4/46)

21) பல் போனால் சொல் மாறுபடும். அவர்கள் ஜபிக்கிற மந்ரங் களில் **சப்த தோஷம்** உண்டாகும். (4/46)

22) வேத மந்ரங்களின் **சுத்தமான சப்தத்துக்கேயுள்ள சக்தியைப்** பற்றி நிறையச் சொல்லியிருக்கிறேன். அந்த சரியான சப்தங்கள் எல்லோருக்கும் சுலபத்தில் வந்து விடாது......... மந்ரங்களின் உச்சாரணம் தப்பினால் பலனே போய் விடுகிறது. (37/5)

(ஒவ்வொரு காரணத்துக்கும் ஒரு விளைவு இருக்கிறது காரணம் இருந்தால் கண்டிப்பாக காரியம் இருக்கவே செய்யும். பௌதீக விஞ்ஞானம் முழுவதும் இந்தக் காரண விளைவு Cause and Effect பற்றிய விதிகளைக் குறித்ததே யாகும். சரியான சப்தம் சரியான பலனைத் தந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையான உச்சாரணத்துடன் கூடிய சப்தம் **பிழையான பலனையே** தந்து நிற்கும்.)

23) வேதத்தில் வரும் **அநேக சப்தங்களை எழுத்தில் கொண்டு வர முடியாது.** அதன் ஏற்றம் இறக்கம் ஸ்வரங்களையும் எழுதிக் காட்ட முடியாது. ஏதாவது பங்சுவேஷன் மார்க் போடலாமே என்றால் அச்சுப் பிழை எழுத்துப்பிழை மாதிரி ஏற்பட்டு விட்டால் மந்த்ர ரூபமே மாறிப்போய் அதன் பலமே விபரீதமாகிவிட இடமுண்டு. (61/35)

24) சப்தம் தானாகப் பலனைத் தரவில்லை. சகல பலனையும் தருகிற பலதாதா ஈஸ்வரன்தான். அப்படியிருந்தும் அவனே நேராக ஒவ்வொரு பலனையும் தராமல் பல அதிகாரிகளை வைத்துக்கொண்டு ராஜாங்கம் நடத்தவது போல ஒவ்வொரு தேவதையை வைத்திருக்கிறான். **அந்தத் தேவதையின் சப்த ரூபமே அதற்கான மந்த்ரம்.** சப்த ரூபமான மந்ரத்தை உருவேற்றி சித்தியடைந்தால் தேவதையின் அவயங்கள் கொண்ட ரூபத்தையும் கண்ணால் காணலாம். இப்படி உள்ள தேவதா சரீரத்துக்கு, குறிப்பிட்ட மந்ரத்தைச் சொல்லி ஆஹு"தி செய்தால் அதுவே அத்தேவதைக்கு ஆஹாரமும் ஆகிறது.

இவ்விதம் யக்ஞம் செய்தால் அந்தத் தேவதைகள் விஷேஷமாகப் பலனைத் தருகின்றன. (4/45)

25) "சரி வேத மந்ரங்களின் சக்தியை நம்புகிறோம். இதற்கு ஏன் தனி ஜாதி வேண்டும்" என்றால் பல காரணம் உண்டு. முதலில் வேதத்தை எழுதிப் படிக்கக் கூடாது. காதால் கேட்டுக் கேட்டுத் திரும்பத் திரும்ப வாயால் உருப்போட்டுத்தான் மனப்பாடம் பண்ணவேண்டும் அப்புறம் இம்மாதிரி தான் கற்றுக்கொண்டதை அடுத்த சந்ததிக்கு வாயால் சொல்லித் தர வேண்டும். வேறு காரியம் வேறு தொழில் என்று வைத்துக் கொண்டால் இது முடியாது. இது அத்தனை காலம் அத்தனை பொழுது தேவையாயிருக்கிற பெரிய சமாச்சாரம். (5/4)

26) வேதத்துக்கு 'சுருதி' என்று ஒரு பெயர். கேட்கப்படுவது எதுவோ அதுவே 'சுருதி' 'சுரோத்திரம்' என்றால் காது. புஸ்தகத்தில் எழுதிப் படிக்காமல் குரு-சிஷ்ய பரம்பரையாக வாயால் சொல்லி, காதால் கேட்டே வேதம் தலைமுறை தலைமுறையாக வந்திருப்பதனால் அதற்கு 'சுருதி' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் தரப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். எழுதிப் படிக்கக் கூடாது என்று ஏன் வைத்தார்கள் என்றால், **வேத சப்தங்களை இப்படி எழுத முடியாது என்பதால்தான்** 'ழ' வுக்கும் 'ள' வுக்கும் நடுவில் உள்ள சப்தம் மாதிரி, **லிபியில் கொண்டு வர முடியாத சப்தங்கள்** வேதத்தில் உண்டு. அதோடுகூட உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் என்றெல்லாம் வேத மந்ரங்களுக்குச் ஸ்வரமும் உண்டு. அதாவது ஓர் அக்ஷரத்தை உயர்த்த வேண்டும். இன்னொன்றைத் தாழ்த்த வேண்டும். சிலதைச் ஸமமாகச் சொல்ல வேண்டும். புஸ்தகத்தில் எத்தனை தான் **(diacritical mark)** போட்டுக் காட்டினாலும், அச்சுப்பிழை வந்து விட்டால், உச்சாரணக் கோளாறாகும். உச்சரிப்புத் தப்பினால் பலனே போய்விடும். (22/3)

27) ஒன்றுக்கொன்று **உச்சாரணம் மாறுபட்டால் எத்தனை விபரீதம்** உண்டாகிவிடும் என்பதற்கு வேதத்திலேயே தைத்திரிய ஸம்ஹிதையில் ஒரு கதை இருக்கிறது. இந்திரனை வதைக்கக்கூடிய பிள்ளை தனக்குப் பிறக்க வேண்டும் என்பதற்காக த்வஷ்டா என்ற தேவதச்சன் ஒரு மந்திரத்தை ஜபம் பண்ணினான். அப்போது அக்ஷரங்களின் உச்சரிப்பில் உதாத்தம் அனுதாத்தம் என்று சொன்னேனே இந்த உயர்த்தல் தாழ்த்தலில் அவன் தப்புப் பண்ணினதாலேயே அவன் விரும்பிய பலனுக்கு நேர்மாறாக, "இந்திரனை வதைக்கக்கூடிய பிள்ளை"க்கு நேர்மாறாக "இந்திரன் வதைக்கக்கூடிய பிள்ளை" அதாவது "இந்திரனால் வதைக்கப்படக்கூடிய பிள்ளை" தனக்கு வேண்டும் என்று அவன் பிரார்த்தித்ததாக ஆகிவிட்டது. அப்படியே பிற்பாடு நடந்தது. (22/3)

28) ரேடியோவில் ஒரு Wave Length (அலைவரிசை) கொஞ்சம் தப்பினால்கூட, வேறு ஏதாவது ஒரு ஸ்டேஷனை அல்லவா பிடித்து விடுகிறது! மயிரிழை தப்பாமல் ரேடியோவில் வேவ் - லெங்க்த் வைத்தால்தானே சரியாகக் கேட்கிறது. இப்படியே தான் வேத உச்சாரணமும், **கொஞ்சம்கூட ஸ்வரம் தப்பிப்** போகக்கூடாது. **வேவ்- லெங்க்த் மாறினால் ஸ்டேசன் மாறி விடுகிற மாதிரி வேத சப்தம் மாறினால் பலனே மாறிவிடும்.**

இதனாலெல்லாந்தான் வேதத்தை காதால் கேட்டுப் பாடம் பண்ணவேண்டும் என்று வைத்தார்கள். "ச்ருதி" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருதத்திலும் "எழுதாக்கிளவி" என்று தமிழிலும் வேதத்துக்குப் பெயர் ஏற்பட்டது. (22/3)

29) மந்திரத்தில் சரியான அக்ஷர உச்சாரணத்தினால் ஏற்படுகிற சலனம்தான் முக்கியமாக சேமத்தைத் தருவது. சப்தம் உண்டாக்கும் பலன்தான் இங்கே விசேஷம். அர்த்தத்தின் விசேஷம் அதற்கப்புறம் வருவதுதான். (22/30)

30) வேத மந்திரச் சப்தம் அதைச் சொல்லுகிறவனுக்குள்ளே நல்ல நாடிச் சலனங்களை உண்டு பண்ணுவதோடு, கேட்கிறவர்களுக்கும் அப்படிப்பட்ட சலனத்தை உண்டு பண்ணுவது. அட்மாஸ்.ஃபியரில் அது பரவியிருப்பதனாலேயே இஹலோகத்துக்கும் பரலோகத்துக்கும் ஷேமமான பலன்கள் ஏற்படும். ஆகையால் அட்மாஸ்.ஃபியரில் அது எவ்வளவு தூரம் வியாபித்திருக்கும்படி பண்ண முடியுமோ அவ்வளவுக்கு பலமாக கோஷிக்க வேண்டும். (22/31)

## (III) பிராமணன்

1) பிராமணனாகப்பட்டவன் வேதத்தின் சப்தத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கவேண்டும். ஜன சமூகம் முழுவதற்கும் அதைக் கொடுத்து ரக்ஷிக்க வேண்டும். (4/36)

2) பிராமணுக்கு 108 ஆசாரங்கள் இருக்கின்றன. (96/33)

3) பிறக்கும்போது பிராமணனும் நாலாம் வர்ணத்தவன்தான். உபநயன ஸம்ஸ்காரங்களால்தான் அவன் 'த்விஜன்' என்னும் இரு பிறப்பாளனாகிறான். அப்புறம் வித்யாப்பியாஸத்தால் அவனுக்கு 'விப்ரன்' என்ற பெயர் உண்டாகிறது. இந்த மூன்றும் சேர்ந்து ஒருத்தனை 'ச்ரோத்திரியன்' ஆக்குகிறது. இப்படி சாஸ்திரத்தில் இருக்கிறது.

ஜந்மதா ஜாயதே சூத்ர:
ஸம்ஸ்காரேர் - த்விஜ உச்யதே I
வித்யாதி யாதி விப்ரத்வம்
த்ரிபி: ச்ரோத்திரிய உச்யதே II

இவன் 'ப்ரஹ்ம' எனப்படும் வேதத்தில் ஊறி அதே ப்ரஹ்ம பதத்தால் குறிப்பிடப்படும் பரமாத்மாவைப் பற்றிய ஞானத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸித்தி அடையும் போதே "ப்ராஹ்மணன்" ஆகிறான். (62/36)

4) தேவாலயத்தைப் போலப் பாதுகாக்கப்பட வேண்டியவை பிராமண தேஹங்கள். வேத மந்த்ர சக்தியை ரக்ஷிக்க வேண்டியவைகளாதலால் ஆலயம் போல் அதிகம் பரிசுத்த மாக இந்தத் தேஹங்கள் இருக்க வேண்டும். அசுத்தியான பதார்த்தங்களை உள்ளே சேர்க்கக்கூடாது. மந்த்ர சக்தியை ரக்ஷித்து அதனால் லோகத்துக்கு நன்மையை உண்டாக்க வேண்டுவது பிராமணன் கடமை. அதனால்தான் அவனுக்கு அதிகமான நிபந்தனைகள் விதிகப்பட்டிருக்கின்றன. "மற்றவர்கள் அது பண்ணுகிறார்களே நாமும் ஏன் பண்ணக் கூடாது? என்று அசுத்தியை தரும் காரியங்களை பிராமணன் பண்ணக்கூடாது. அவர்களெல்லாம் சரீரத்தை வைத்துக்கொண்டு ஸந்தோஷமான அனுபவங்களை அடைகிறார்களே என்று இவன் தனக்குத் தகாதவற்றைச் செய்யக் கூடாது. பிராமணுக்கு தேஹம் ஸந்தோஷத்தை அனுபவிப் பதற்காக ஏற்பட்டதல்ல லோக உபகாரமாக வேதத்தை ரக்ஷிக்க வேண்டிய தேஹம் அது. (35/7)

5) மந்திரங்களை ரக்ஷிக்க வேண்டிய சரீரங்களை **அதற்குரிய யோக்கியதை பெறும்படியாகப் பண்ணுவதற்காகவே ஏற்பட்ட ஸம்ஸ்காரங்கள்** பல இருக்கின்றன. இவற்றை இந்த மந்த்ர ரக்ஷணை என்ற காரியமில்லாத மற்ற சரீரிகளுக்கு எதற்கு வைக்கவேண்டும்? உடைந்து போகிற க்ளாஸ் சமான்களை பார்சலில் அனுப்ப வேண்டுமானால் அதற்குச் சில விசேஷ பாதுகாப்புப் பண்ணுகிறார்கள். மற்ற ஸாமான்களுக்கு இப்படிப் பண்ணவில்லை என்பதால் அவற்றை மட்டம் தட்டுகிறார்கள் என்று ஆகுமோ? இந்நாளில் ரேடியேஷனை (கதிரியக்கத்தை) உத்தேசித்து ஸ்பேசுக்கு (வானவெளிக்கு) போகிறவனை முன்னும் பின்னும் ஐசொலேட் செய்து (பிரித்து வைத்து) ரொம்பவும் ஜாக்கிரதை பண்ணவில்லையா? **இந்த மாதிரி இதை விடவும் மந்திரங்களுக்கு ரேடியேஷன் உண்டு என்று புரிந்துகொண்டால் பிராம்மணனைப் பிரித்து ஸம்ஸ்காரங்ளை வைத்ததன் நியாயம் புரியும்.** (35/19)

6) ஸம்ஸ்காரங்கள் ஒரு ஜீவனை உத்தேசித்து அவனைச் சுத்தப் படுத்துகிறபோதே அதில் பிரயோஜனமாகிற மந்திர சப்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோகத்துக்கெல்லாம் நல்ல வைப்ரேஷனைக் கொடுக்கிறது. (37/36)

7) பிராமணனின் தேஹம் இந்திரிய சுகத்துக்காக ஏற்பட்டதே அல்ல. அது லோக க்ஷேமார்த்தமாக வேதத்தை ரக்ஷிப்பதற்கு என்ன நியமங்களை அனுஷ்டானங்களைப் பின்பற்ற வேண்டுமோ அவற்றைச் செய்யவே ஏற்பட்டது. அதில் அதிகப்படியான எந்தப் போக்ய வஸ்துவும் சேர்க்கக்கூடாது என்பதுதான் அடிப்படைக் கொள்கை. (4/29)

8) ஸமூக நவனுக்காக மந்த்ர ரக்ஷணை பண்ண வேண்டிய தேஹத்திலிருந்து மற்ற தேஹம் விலகியிருக்க வேண்டியிருக் கிறது. (100/28)

9) பத்தியம் தப்பினால் மருந்து பலிக்காது அந்த மாதிரி மந்திர ஸித்தி ஸித்திப்பதற்கு சில நியமங்களை பத்தியம் போல வைத்திருக்கிறது. இந்த நியமங்களில் தப்பு வந்தால் மந்திரங்களிலிருந்து உத்தேச பலன் கிடைக்காது. (4/48)

10) ஸயன்ஸ் பரிசோதனை செய்கிற லாபரட்டரியில் இப்படியிப் படி இருக்கவேண்டும் என்ற ரூலை மீறினால் நிஷ்பலனாகும் அல்லது விபரீதமாகும். மின்சாரத்தில் வேலை செய்யும் போது "மரத்தில் நிற்கமாட்டேன்" "ரப்பர் உறை (gloves) போட்டுக்கொள்ள மாட்டேன்" என்றால் என்ன ஆவது? அப்படித்தான்? (4/48)

11) மந்திர சக்தியாகிய அக்னி இப்பொழுது பெரும்பாலும் அணைந்திருக்கிறது. பிராமண தேஹம் விகாரமாகிவிட்டது. (35/8)

12) அவனுடைய தனி வாழ்க்கையில் துளிகூட ஆடம்பரமே இருக்கக் கூடாது. அவன் இந்திரியங்களை வாட வாட வைத்து அதனால் கிடைக்கிற மந்திர ஸித்தியால்தான் லோக க்ஷேமத்தை உண்டு பண்ண முடியும். (5/6)

13) எத்தனை லாபம் தருகிற தொழிலானாலும் சௌகரியமான தொழிலானாலும் பிராமணன் அவற்றைச் செய்யக்கூடாது. வேத அத்யயனமும் (தான் படிப்பது ஓதுவது) அத்யாபனமும் (பிறருக்கு படிப்பிப்பது ஓதுவிப்பது) தான் இவனுடைய தொழில். (5/5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) மந்திர ஸித்திக்கு வேண்டிய மகா கடுமையான விதிகளை விரதங்களை உபவாஸங்களை அனுஷ்டித்துக் கொண்டு இவன் ஜீவனை ரக்ஷித்துக் கொண்டிருக்கிற அளவுக்கு மட்டுமே ஆஹார விஹாரங்களைச் சுருக்கிக் கொண்டு குடிசையில் தான் வாழவேண்டும் என்று சாஸ்திரம் சொல்லியிருக்கிறது. இவன் வேறு தொழில் செய்து சம்பாதித்து இந்திரிய சுகங்களில் விழுந்து விடக்கூடாது. (5/5)

15) பணம் சம்பாதிக்கிற லட்சியம் இவனுக்கு உதவாது. பரம தியாகியாக லோக சேஷமார்த்தமாக வேத ரக்ஷணம் கர்மானுஷ்டானங்களைச் செய்து கொண்டு காலம் கழிக்க வேண்டும். (5/5)

16) பிராமணன் வேதத்தைக் காதால் கேட்டுப் பாடம் பண்ண வேண்டும். அதாவது அத்யயனம் செய்ய வேண்டும் அதே மாதிரி இன்னொருத்தனுக்கு வாயால் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதாவது அத்யாபனம் செய்ய வேண்டும். அத்தியயனம் வேதத்தைத் தான் ஓதுவது. அத்யாபனம் இன்னொருத்தனுக்கு வேதத்தை ஓதுவிப்பது. இதோடு பிராமணன் **வேதத்தில் சொல்லியிருக்கிற நித்ய கர்மானுஷ்டானங்களையும் யாக யக்ஞாதிகளையும் செய்ய வேண்டும்** என்று சாஸ்திரத்தில் இவனுக்குரிய தொழிலை வகுத்துக் கொருத்திருக்கிறது. (4/36)

17) மூன்று வயசில் செய்கிற **சௌளம்** (குடுமி வைத்தல்) ஐந்து அல்லது ஏழாம் வயசில் பண்ணுகிற உபநயனம் முதலானவைகளே ஜாதியைப் பார்த்து அதன்படி பண்ணுகிற ஸம்ஸ்காரங்கள்தான் (38/15)

18) குழந்தையின் ஆறாம் மாஸம் உணவூட்டுவதான "அன்னப் பிராசன" ஸம்ஸ்காரம்

கர்ப்பானதானம் முதல் நாமகரணம் வரை குழந்தையை முன்னிட்டு பெற்றோரே பண்ணுவது. அன்னப் பிராசனத்தில் தகப்பன் மந்திரம் சொன்னாலும் குழந்தையே சாப்பிடுகிறது. அந்த அந்த காலத்தில் அந்த அந்த மந்திரத்தைச் சொல்லி அந்த அந்த திரவியங்களைக் கொண்டு அந்த அந்த ஸம்ஸ்காரத்தைச் செய்ய வேண்டும்.

**அன்னப் பிராசனத்துக்கப்புறம் 'சௌளம்' செய்ய வேண்டும். அதாவது சிகை (குடுமி) வைக்கிறது. ஸத்கர்மாவுக்கு உபயோகமாக இருக்க அது பண்ண வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸன்னியாசிக்கு சிகை இல்லை. மொட்டைத் தலையாக இருக்கவேண்டும். ஸன்னியாசிகள் மந்ர பூர்வமாகத்தான் சிகையை எடுத்துக்கொள்ள வேண்டும். மந்திர பூர்வமாக வைத்துக் கொண்ட சிகையை பரமேஸ்வரனுக்கு முன்பு பண்ணின பிரதிக்ஞைக்கு விரோதமாக இஷ்டப்படி எடுத்து விடுவது தப்பு.

சிகையை எடுப்பது ஒரு பெரிய தப்போ என்று கேட்கலாம். பொய் சொல்லுகிறது தப்பு அல்லவா? அது எவ்வளவு தப்போ அவ்வளவு தப்பு இதுவும்!

வேத அதயயனம், வைதிக கர்மானுஷ்டானம், தர்மப்படி இல்லறத்திலிருந்துகொண்டு பண்ணும் தாம்பத்தியம் இவற் றிலே சரீரத்துக்கும் சரீரத்தின் நாடிச் சலனங்கள் மூலம் சித்தத்துக்கும் ஏற்படவேண்டிய பலத்துக்கு தலையில் பிரம்ம மந்திரத்தில் சிகை என்ற பெரிய ரக்ஷை இருப்பது பெரிய காப்பாகும். கூரைக்கு ஓடு போடுகிற மாதிரி அது! வேத கர்மாவும் தாம்பத்தியமும் நின்று போன ஸன்னியாஸ ஆச்சிரமத்தில்தான் இந்த ரக்ஷை தேவையில்லாமல் போகிறது. ஆகையால் **கிருஹஸ்தன் ஸன்னியாசியாக ஆனாலன்றி குடுமியை எடுக்கக்கூடாது** தற்காலத்தில் பிரம்மச்சர்ய கிருஹஸ்தாச்ரம காலங்களிலும் வேத ஸம்பந்தத் துக்கு முழுக்குப் போட்டுவிட்டதால் சிகையும் இல்லாம லிருக்கிறோம்.

பாபம் பண்ணி நரகவாஸம் பண்ணுகிற ஜீவர்களின் பிரீதிக்காக, ஒரு கிருஹஸ்தன் ஸ்நானம் செய்யும் போது மந்திர பூர்வமாக சிகோதகம் தரவேண்டும். (குடுமியிலிருந்து ஜலத்தைப் பிழிந்து கொடுக்கவேண்டும்.) என்று இருக்கிறது. சிகை இல்லாவிட்டால் இதை எப்படிப் பண்ணுவது?

(34/20)

19) பிராமணனானவன் காலம்பர (காலை) நாலு மணிக்கே முழித்துக்கொண்டு, மழை நாளானாலும் பனி நாளானாலும் பச்சைத் தண்ணீரில் ஸ்நானம் செய்யவேண்டும். அதிலிருந்து அவனுக்கு ஓயாத கர்மானுஷ்டானங்கள்தான். ஸந்தியா வந்தனம், பிரம்ம யக்ஞம், ஔபாசனம், தேவபூஜை, இது தவிர இருபத்தியொரு யக்ஞங்களில் ஏதாவது ஒன்று இப்படிச் சக்கையாக உழைத்தாக வேண்டும். (38/29)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) இவனுக்கு எத்தனை வ்ரதானுஷ்டானங்கள்? உபவாஸம் என்று எத்தனை நாள் வயிற்றைக் காயப் போட வேண்டும்? எத்தனை ஸ்நானம்? அவன் போஜனம் பண்ணுகிறபோது பகல் 1மணி 2மணி ஆகிவிடும். சிராத்தம் யாக தினங்களில் 3மணி 4மணி ஆகும். (38/29)

21) எத்தனை மணிக்குச் சாப்பிட்டாலும் பழையது சாப்பிடக் கூடாது. புது அன்னம்தான் சாப்பிடவேண்டும். குடிசையில் தான் எளிமையாக வசிக்கவேண்டும். சேமிப்பு என்று எதுவும் பணம் சேர்த்து வைத்துக்கொள்ளக்கூடாது. பிற்பாடு கொடுக் கலாம் என்று இப்போது கடன் வாங்கி கொஞ்சம் "தாட் பூட்" செலவு பண்ணக்கூட பிராமணனுக்கு 'ரைட்' கிடையாது. (38/29)

22) ரொம்ப ரொம்ப detailed ஆக Minute ஆக elaborate ஆக (அம்சம் அம்சமாக, நுணுக்கமாக, விஸ்தாரமாக) ஆசார விதிகளை சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. (49/21)

23) பிராமணன் ஸ்நானம் செய்யும்போது சொல்ல "அகமர்ஷண ஸுக்தம்" என்று ஒன்று இருக்கிறது. (48/14)

24) ஸுர்யோதயத்துக்கு முந்தைய மூன்றே முக்கால் நாழிகைக்கு பிராத காலம் என்பது பெயர். அந்தக் காலத்தில் பச்சை ஜலத்தில் குளிப்பதற்கு பிராத ஸ்நானம் என்று பெயர். ஆற்றில் குளத்தில் செய்தாலும் சரி, அகத்தில் மொண்டு கொண்டு செய்தாலும் சரி, தலைக்கும் ஜலம் விட்டுக் கொள்ள வேண்டும். (48/11)

25) பிராத ஸ்நானத்தை இப்படித் தேஹத்துக்காக மாத்திரமில் லாமல் ஆத்மார்த்தமாக ஆக்கிக் கொடுக்கும்போது முதலில் கொஞ்சம் அருகம் புல்லையும் கொஞ்சம் சுத்தமான மிருத் திகையையும் (மண்ணையும்) தலையில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போது அந்த அருகம் புல்லையும் ஈச்வர சக்தியின் ஓர் அம்சமான தேவதை என்று பக்தியோடு புரிந்துகொண்டு அதை ஸ்துதித்து "தூர்வாஸுக்தம்" என்ற மந்திரங்களைச் சொல்லவேண்டும். அல்ப புல் என்கிறோமே அதைக்கூட ஈச்வராம்சம் என்று வேதமே ஸ்தோத்திரிக்கும் ஸுக்தத்தைச் சொல்லவேண்டும். மண்ணாங்கட்டி என்று மட்டமாகச் சொல்கிறோமோ, அந்த மண்ணையும் இப்படியே ஸாசஷாத் நாராயணா பத்தினியான பூப்பிராட்டியாகப் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு "ம்ருத்திகா ஸூக்தம்" சொல்லிப் புல்லோடு தலையில் வைத்துக் கொண்டு குளிக்க வேண்டும். (48/14)

வேத மந்திரங்களின் வீர்யம் குறையாமல் அவற்றை ரக்ஷித்துத் தருகிற பொறுப்புப் பெற்றவர்களும் புத்தி வேலை அதிகமுள்ளவர்களுமான ஜாதியாருக்குக் காரியமும் வேண்டும். ஆசாரக் கட்டுப்பாடும் அதிகம் வேண்டுமென்றுதான் சாஸ்திரத்தில் அவர்களுக்கு மந்திரபூர்வமாக இத்தனை அனுஷ்டானங்களை கொடுத்திருக்கிறது. (48/15)

26) 'முக்ய' ஸ்நானமான நீராடலுக்கே ஐந்து அங்கங்கள் சொல்லியிருக்கிறது.

ஸங்கல்ப ஸூக்தபடநம் மார்ஜனம்ச(அ) கமர்ஷணம் I
தேவதா தர்ப்பணம் சைவ ஸ்நானம் பஞ்சாங்க உச்யதே II

முதலில் **ஸங்கல்பம்** எந்த கர்மாவானாலும் பாப பிராயச்சித்தமாகவும் பரமேச்வரப் பிரீதிக்காகவும் இதைப் பண்ணுகிறேன். என்று ஸங்கல்பம் பண்ணிக்கொண்டு ஆரம்பிக்க வேண்டும். முன்னாலே சொன்னபடி வேத ஸூக்தங்ககளைச் சொல்லுவது "ஸூக்தபடனம்"

'மார்ஜனம்' என்பது 'ஆபோஹிஸ்டா' முதலிய மந்திரங்களால் முதலில் ஜலத்தைப் புரோக்ஷணம்செய்து கொள்வது. அப்புறம் தான் உள்ளே முழுகி ஸ்நானம் செய்யவேண்டும்.

அப்போது மூன்று தடவை அகமர்ஷண ஸூக்தத்தை ஜலத்துக்குள்ளிருந்து ஜபிக்க வேண்டும்.

.........ஸ்நானம் முடிந்தவுடன் ஜலத்திலிருந்து கொண்டே தேவ ரிஷி பித்ருக்களுக்கு **தர்ப்பணம்** செய்யவேண்டும்.

குளியல் என்று ஸாமான்யமாகத் தோன்றுகிற காரியத்துக்கு இத்தனை லக்ஷணங்களும் விதிகளும்! இப்படியே ஒவ்வொன்றுக்கும்!

வாழ்க்கை அம்சங்களில் இண்டு இடுக்குவிடாமல் பல் தேய்ப்பதிலிருந்து ஆரம்பித்து, புத்ரோத்பத்தி பண்ணுவது, ஒரு பிரேதத்தை டிஸ்போஸ் பண்ணுவது உட்பட இது சின்னது, இது பெரிசு - இது தான் ஆத்மார்த்தமானது, இது லோக சம்பந்தமானது என்று பிரிக்காமல் எல்லாவற்றையும் ஆத்ம ஸம்பந்தமாக்கிக் கணக்கில்லாமல் ஆசார விதிகளைக் கொடுத்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஸ்நானம்' என்று ஒன்றை எடுத்துக் கொண்டால் அதில் இவ்வளவு சொன்னேன். அதற்கு முதலில் தூர்வை, மிருத்திகை முதலியவற்றைத் தரித்துக்கொள்ள வேண்டுமென்று முன்னே சொன்னேன். ஸ்நானம் செய்வதற்கு இன்னும் அநேக 'ரூல்கள்' இருக்கின்றன. வெளிசுத்தத்திற்கு மாத்திரமென்றால் அழுக்குப் போக நன்றாகத் தேய்த்துக் குளித்தால் மட்டும் போதுமென்று விட்டுவிடலாம். உள் சுத்தத்துக்குமானதால் நமக்குத் தெரியாத, புரியாத, பிடிக்காதகூடத்தான் ரூல்களை யும் இப்படிச் சுத்தியான ரிஷிகள் கொடுத்துள்ள சாஸ்திரப் பிரகாரம் Follow பண்ண வேண்டும். (49/20)

27) ஒரு பிராமணப் பையனுக்குள் காமம் பிரவேசிப்பதற்கு முன் காயத்ரி பிரவேசித்து அவன் தினமும் ஸஹஸ்ராவ்ருத்தி (ஆயிரம் ஆவிரித்தி) அளவுக்கு ஜபித்து மந்த்ரஸித்தி அடைந்தால்தான் அவன் தனக்கும் சித்த பரிசுத்தி பெற முடியும். லோகத்துக்கும் ஷேமகரமான 'வைப்ரேஷன்களை' ரேடியேட் செய்ய முடியும். ஆன்மீக அதிர்வலைகளைப் பரப்ப முடியும். (98/37)

28) 'சாஸ்திரமும் வேண்டாம், ஸம்பிரதாயமும் வேண்டாம்' என்று விட்டு விட்டு எல்லாம் கிரிசை கெட்டுக் கிடக்கிற தற்காலத்திலே கூட (1959 மார்ச்) எங்கேயாவது வைதிகஸ்ரீ இருந்து கொண்டிருக்கிறதென்றால் அது மலையாள தேசந்தான் என்றுதானே பார்க்கிறோம்? அங்கேதான் தற்போதும் நம்பூதிரி க்ருஹங்களில் கர்ப்பத்தைக் கூட்டி எட்டு வயஸில் பசங்களுக்கு உபநயனம் செய்து, அப்புறம் அஞ்சு ஆறு வருஷமாவது அவரவருக்கான (வேத) சாகையில் அத்யயனம் பண்ணுவதற்கு விடுகிறார்கள். இந்த அத்யயன காலத்தில் **சாஸ்திரத்தில் சொல்லியுள்ளபடி** ப்ரஹ்மச்சாரிப் பசங்கள் **ஒரு கோவணத்தை மட்டும் கட்டிக் கொண்டு தண்டம் வைத்துக்கொண்டு மான்தோலில் படுத்துக் கொண்டு நியமமாக இருக்கிறார்கள்.** (97/4)

29) **ஆசார நியமம்தான்** மலையாளத்து கோயில்களின் ஸான்னித்தியத்தை காப்பாற்றி வருகிறது. (97/7)

30) வர்ணாச்ரம தர்மங்கங்கள் யதோக்தமாக நடைமுறையில் அனுஷ்டிக்கப்பட்ட காலத்திலேயே பிராமணனுக்கு அபரிக்ரஹம், **ஸமுத்திரத்தைத் தாண்டிப் போகக்கூடாது** என்பது போன்ற **கட்டுப்பாடுகளைப் போட்ட** சாஸ்திரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைச்யர்களுக்கோ 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்று உபதேசம் பண்ணிற்று. (79/20)

31) இவன் **திரைகடல் ஓடியும் திரவியம் சேர்க்கக்கூடாது என்பது ரூல்.** இவனுக்கு தரித்திரம்தான் சாஸ்திரம் விதித்திருக்கிறது. இவன் அன்னிய தேசங்களுக்கு போகக் கூடாது. **போனால் பிரஷ்டனாகி விடுவான்.** (48/43)

32) அபரவாஸம் என்பதற்கு தன் ஊரைவிட்டுப் போகக்கூடாது என்று அர்த்தம். மானமோ அவமானமோ கஷ்டமோ நஷ்டமோ நமக்கேயுள்ள தர்மத்தைச் செய்துகொண்டு ஊரோடு கிடக்க வேண்டும். இப்போது இங்கிலாந்தில் ஸெட்டில் ஆகிறோம், அமெரிக்காவில் ஸெட்டில் ஆகிறோம் என்று வெறும் பணத்துக் காக ஆசாரங்களை விட்டுவிட்டுப் பறந்து கொண்டு, இதைப் பெருமையாகவே சொல்லிக்கொண்டிருக்கிறோம். இதைச் சாஸ்திரத்தில் ரொம்பவும் நிஷித்தமாக (இழுக்காக) சொல்லி யிருக்கிறது. (38/31)

33) விவாஹமானவன் திரிராத்ர சிக்ஷையோடு இருக்க வேண்டு மென்பது அத்தியாவசியம். அதாவது மூன்று நாட்களும் பூர்ண பிரம்மச்சரிய விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். அன்றே நிஷேகம் என்பது மஹாதோஷம். (36/34)

34) வித்யாப்யாஸம் செய்கிறவனுக்கு அந்தக் காலம் பூராகவும் ப்ரம்மச்சர்யம் அப்புறம் கல்யாணமான பின்னர் இன்னின்ன நாளில்தான் தம்பதிகள் ஸங்கமனம் செய்யலாம்! பித்ரு தினம் விரத காலம் போன்றவற்றில் செய்யக்கூடாது! (48/8)

35) இன்ன பதார்த்தங்களைத்தான் சாப்பிடலாம் இன்னது கூடாது என்பது பொது விதி, அதற்கப்புறம் பித்ரு தினத்தில் இன்னின்ன சமைக்கலாம் சாப்பிடலாம். விரத தினத்தில் இப்படியிப்படி உபவாஸமிருக்க வேண்டும். அது தவிர இன்ன மாஸத்தில் இப்படி சாப்பிடக்கூடாது என்றெல்லாம் வேறு விதிகள் இருக்கின்றன. (50/34)

36) ரொம்ப ரொம்ப **detailed** ஆக, **Minute** ஆக, **Elaborate** ஆக (அம்சம் அம்சமாக, நுணுக்கமாக, விஸ்தாரமாக) ஆசார விதிகளை சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. (49/21)

37) சுத்த ஆஹாரமென்றால் **ஸத்வ** ஆஹாரம் என்றே அர்த்தம். (50/38)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38) பிராமணர்கள் என்றுமே **வெங்காயம் உள்ளிப்பூண்டு** சாப்பிடக் கூடாது. மந்திர ரக்ஷணையை முன்னிட்டே பிராமணருக்கு இங்கே கூடுதல் நியமம் (49/31)

39) கிருஹஸ்தன் செய்யவேண்டிய ஏராளமான அக்னி காரியங் களுக்கு ஆரம்பம் தான் **ஔபாஸனம்.** (37/13)

40) ஹோமம் செய்யவேண்டிய அக்ஷதை பத்தினியே குத்திய தாக இருக்க வேண்டும். இது மந்திர பூர்வமான காரியம். (37/12)

41) விவாஹம் அக்னி சாக்ஷியாக அக்னியில் ஹோமத்துடன் தானே நடக்கிறது? அந்த அக்னியிலேயே விவாஹத்தின் போதே **ஔபாஸனம்** ஆரம்பிக்கப்படுகிறது. பிறகு **வாழ்நாள் பரியந்தம் அந்த ஔபாஸனாக்கினி அணையாமல் அதை உபாஸிக்க வேண்டும்.** (35/15)

42) தகப்பனாருடைய ஔபாஸனாக்கினியிலிருந்தே புத்ரனின் விவாஹத்தில் வளர்க்கப்படும். இதுவே அப்புறம் புத்ரனின் ஜீவ பரியந்தம் அவனுக்கு ஔபாஸனாக்கினியாகிறது. இப்படி அவிச்சின்னமாக (முறிவுபடாமல்) தலைமுறை தலைமுறையாக அதே அக்னி போகும். (37/16)

43) விவாஹத்தின் போது ஔபாஸனம் செய்யப்பட்ட அக்னியை இரண்டாகப் பிரிக்கவேண்டும். அதற்கென்று "அக்னி ஆதானம்" என்ற ஒரு சடங்கு உண்டு. இப்படிப் பிரித்ததில் ஒன்றே க்ருஹ்ய காரியங்களைச் செய்யவேண்டிய "கிருஹ்யாக்கினி" ஆகிறது. மற்றது ச்ரௌதை காரியங்களைச் செய்ய வேண்டிய "ச்ரௌதாக்னி" ஆகிறது. அதன் பின் இந்த இரண்டு அக்னிகளையும் சாச்வதமாக ரக்ஷித்து வர வேண்டும். (37/17)

44) பிராமணர்களுடைய வீட்டுக்கு வீடு அக்னி ஸ்வலித்து அதில் சாஸ்திரப்படி சேர்க்கவேண்டிய நெய் பால் ஹவிஸ் மணந்து கொண்டிருந்தால் அரோக திடகாத்திரமும் உத்தமமான மனோவிருத்திகளும் ஸகல ஜாதி ஜனங்களுக்கும் ஏற்படும். (37/14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45) பிராமணன் ஷத்திரியனையும் வைசியனையும் போல சரீர ஸௌகரியங்களை அனுபவித்தால் **மந்திர சக்தியே** இராது. (38/48)

46) வேதத்தை எழுதிப் படிப்பவன் (லிகித பாடகன்) 'அதமன்' என்று வைத்தார்கள். தமிழிலோ வேதத்துக்கு 'எழுதாக் கிளவி' என்றே பெயர். ஸமஸ்கிருதத்தில் வேதத்துக்கு 'ச்ருதி' என்று ஒரு பெயர். 'ச்ருதி' என்றாலும் காதால் கேட்கப்பட வேண்டியது, **அதாவது எழுத்தில் படிக்கக்கூடாது** என்றே அர்த்தம். வாயால் சொல்லி காதால் கேட்டு மனப்பாடம் பண்ணுவது என்பதால்தான் இது பகுதிநேர (Part time) வேலையாயில்லாமல் முழுநேர (Whole time) **வேலையாயிற்று.** (5/8)

47) ஒரு நோக்கம் இல்லாமல், வெறுமனே மற்றவர்களுக்குப் போட்டியாக இவனும் பணத்தைத் தேடிப்பறந்து கொண்டிருக் கிறான் என்றால், அப்புறம் இவன் பிராமணன் என்று தனியாக இருக்கவேண்டிய அவசியமே கிடையாது. இப்படி 'பர்பஸ்' இல்லாமல் பிராமண ஜாதி இருந்தால், அதை மற்றவர்கள் அழிப்பதற்கு முன்னால் நானே அழித்துவிட வேண்டும் போலிருக்கிறது. (5/11)

48) இப்போதிருக்கின்ற பிராமணன், தனக்கு ஏதோ தனி மரியாதை எதிர்பார்த்தானானால், இவனைத் துவேஷிக்கத்தான்வேண்டும். ஆனால் துவேஷமும் தூஷணையும் நியாயமானதாக இருக்க வேண்டும். இவன் தன் தர்மத்தை விட்டதற்காகத்தான் தூஷிக்க வேண்டுமே ஒழிய வேத தர்மமே தப்பு என்று அந்தப் பெரிய மூலதனத்தையே தூஷிக்கக்கூடாது. (5/11)

49) அக்னி ஸம்பந்தமே கூடாது என்று ஸன்னியாசிக்குக் கட்டுப்பாடு இருப்பது போல் ப்ரம்மச்சாரிக்குக் கிடையாது. அவன் **தினமும் இரண்டு வேளையும் பண்ண வேண்டிய ஸமிதாதானம்** என்பது அக்னி வளர்த்து அதில் ஸமித்தைப் போடுகிற சடங்குதான். (52/11)

50) வேதம் போய்விட்டால், அதற்கப்புறம் பிராமணன் என்ற தனி ஜாதியிருக்க வேண்டிய அவசியமே இல்லை. (5/8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51) பிராமணன் வேதத்தை விட்டதால்தான் இன்றைக்கு லோகத்தில் உள்ள அத்தனை கோளாறுகளும் கஷ்டங்களும் விபரீதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. (5/11)

## (IV) ஆசாரம்

1) ஒழுக்கம் என்பதே ஆசாரம் அது உள்குணம் வெளிநடத்தை, வெளிச்சின்னம், எல்லாம் அடங்கியது. (48/31)

2) ஸர்வ சாஸ்திரங்களுக்கும் ஆசாரமே முதலானதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

3) ஒழுக்கம் கெட்டவர் எந்த சாஸ்திர கர்மாவுக்குமே தகுதி இல்லாதவர். (48/7)

4) ஆசாரம் இல்லாமல் எத்தனைதான் வேதத்தைப் படித்தாலும் அதனால் ஒருத்தனை வேதம் சுத்தனாக்கிவிடாது. எப்பேர்ப்பட்ட புண்ணிய தீர்த்தமானாலும் மண்டையோட்டில் கொண்டு வந்தால் எப்படிப் பிரயோஜனப்படாதோ, எத்தனை நல்ல பசும் பாலானாலும் நாய்த்தோல் பையிலே வைத்திருந்தால் எப்படிப் பான யோக்யமாகாதோ அப்படியே ஆசாரஹீனன் எவ்வளவு வேத சாஸ்திரங்களெல்லாம் படித்தவனாக இருந்தாலும் அவனிடமுள்ள வித்யை அவனுக்கும் உதவாமல் லோகத்துக்கும் உதவாமலே போகும் என்று சாஸ்திரத்திலிருக்கிறது. (48/4)

5) **மறப்பினும் ஓத்து கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்**
**இந்தக் குறளுக்கு என்ன அர்த்தமென்றால் —**

ஒரு பிராமணன் வேதத்தை மறந்து போய் விட்டால் கூடப் பரவாயில்லை. மறுபடியும் அத்யயனம் பண்ணிக் கற்றுக் கொண்டு விடலாம்.

பார்ப்பான் ஓத்து மறப்பினும் கொளல் ஆகும்.

அதாவது வேதம் மறந்துபோனாலும் மறுபடி கற்றுக்கொண்டு விடலாம். கற்றுக் கொளலாகும்.

ஆனால் அவன் ஒழுக்கத்திலிருந்து, அதாவது ஆசாரத்திலிருந்து வழுவிவிட்டால் அவனது பிராமண ஜன்மமே கெட்டுப் போய்விடும். அதாவது வீணாகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் குன்றப் பிறப்புக் கெடும்

பிராமணனுக்கு வேதம் மறந்து போய்விட்டால்கூட பாதக மில்லை. மறுபடி கற்றுக் கொண்டு விடலாம்.

ஆனால் அவன் மாத்திரம் ஆசார ஹீனனாக ஆனானோ அத்தோடு அவனுடைய பிராம்மண்யமே போச்சு. (48/32)

6) **வைதீக கர்மானுஷ்டானங்களைப் பண்ணுவதானால்** அதற்கு நிரம்ப ஆசாரங்கள், ஸ்நான பான ஆஹார நியமாதிகள் உண்டு. இந்த நியமம் என்ற பத்தியம் இருந்தால்தான் வேத மந்திரம் என்ற மருந்து வேலை செய்யும். **ஆசாரம் தப்பினால் அபசாரம்** அது பெரிய பாபம். அதற்காக கஷ்டம் அனுபவித்தாக வேண்டும். (38/46)

## (V) கலப்படப் பொருட்கள்

1) 'அக்ஷதை' என்றாலே முறியாதது என்று அர்த்தம். ஆனால் இப்போது மந்ராக்ஷதை என்று போடுவதில் ''நொய்'' மாதிரி தூளாகத்தானே இருக்கிறது. மந்ராக்ஷதை முழுசாக இருந்தால் தான் அதனால் மங்களம் கிடைக்கும். எங்கிருந்தோ 'டின்' னில் அடைத்து வருகிற 'நெய்' யில் ஏதாவது கொழுப்புக் கலந்திருந்தால் அதை ஸ்வாமி தீபத்துக்குப் போடும்போது உத்தேசித்த க்ஷேமம் உண்டாகாமலே போய்விடும். (43/7)

2) நான் கேள்விப்பட்டிருக்கிறேன் முன்பெல்லாம் யாராவது ஒரு ஹோமம், யக்ஞம் என்று செய்தால் விரோதிகள் அதை நிஷ்பலனாக்குவதற்கு அதற்கு ஒரு தந்திரம் பண்ணுவார் களாம். அதாவது ஹோமம் பண்ணுகிறவனிடம் ரொம்பவும் சிநேகம் வந்துவிட்டதுபோல் நடிப்பார்களாம். ஹோமத்துக்கு நாங்கள் நெய் கைங்கர்யம் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு நெய்யில் கொஞ்சம் பன்றிக் கொழுப்பைக் கலந்து கொடுத்து விடுவார்களாம். **அவ்வளவுதான் !** இந்த மாதிரி அசுத்த நெய்யினால் ஹோமம் பண்ணினால் பண்ணு கிறவர்களுக்கு நல்ல பலன் கிடைக்காமல் போய்விடும் என்பதோடு, விபரீதப் பலன் வேறு உண்டாகும். ஹோமம் அல்லது ஸ்வாமி தீபத்துக்கான நெய், மந்திரக்ஷதை, குங்குமம் முதலியன சுத்தமாக இருக்கவேண்டும். (43/7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) அமெரிக்காவில் கட்டின கோயில் என்றால் கூட அங்கே பிஸ்கெட் நைவேத்தியம் செய்யாமல் புளியோதரையைத் தானே கொண்டுவர வேண்டியிருக்கிறது. (66/36)

4) இப்போது **எவர்ஸில்வர்** என்று ஒன்று ரொம்ப நடமாடுகிறது. **ஸ்வாமி தீபம்** உள்பட, **கலசமாக வைக்கிற குடம்** உள்பட எல்லாம் இதில் வந்துவிட்டது. இத்தனை காலம் **இரும்புப் பாத்திரம் உதவாது** என்ற சாஸ்திர விதியை அனுஸரித்து வந்தவர்களும் இப்போது எவர்சில்வரை உபயோகிக்கிறார்கள். இரும்பு கூடாது என்பதற்குக் காரணம் அது துருப்பிடிக்கக்கூடும் என்பதுதான். அதனால் அதில் ஆரோக்கிய ஹானி உண்டாகிற ஹேது உள்ளது என்கிறது தான் ஆனால் அந்த இரும்பை இப்படி எவர் ஸில்வராக ''ப்ராஸஸ்'' பண்ணிவிட்டபின் அதில் துருப்பிடிப்பதற்கே யில்லை. அது **Health Hazard** ஆகாது இரும்பின் தோஷத்திற்குப் பரிஹாரம் பண்ணிவிட்டதால் அதை உபயோகிக்கலாம் என்று சொல்கிறார்கள். துருவுக்காகத் தான் இரும்பு கூடாது என்று இவர்களாகவே அனுமானம் பண்ணிக்கொண்டு இப்படி எவர்ஸில்வரை சாஸ்திரோக்தமானதாக ஆக்கிவிட நினைக்கிறார்கள். ஆனால் சாஸ்திரம் இரும்பு கூடாது என்றது துருவுக்காக அல்ல, அல்லது துருவுக்காக மாத்திரம் அல்ல அது **பாபகரமானது ஆஸுர (அசுரத்தனமான) சக்திகளையும் சனீஸ்வரன் மாதிரி உக்ர கிரஹங்களின் சக்தியையும் நம்மிடம் இழுத்து** வரும் என்பதால்தான் கூடாது என்று சாஸ்திரம் வைத்திருக்கிறது. **எவர்ஸில்வரிலும் இந்த தோஷம் போய்விடாது.** (48/26)

இதே மாதிரி ஹோமத் திரவியங்கள் அட்மாஸ்ஃபியரிக் பொல்யூஷனை போக்குவதைவிட முக்யமாக **ஆஸுரசக்திகளைத் துரத்தித் திவ்ய சக்திகளை கொண்டு வருவதற்கே** ஏற்பட்டவை. அதனால் வறட்டிக்கும் ஸமித்துக்கும் பதிலாக அவற்றைவிட வீர்யத்தோடு ஏதாவது **Anti Pollution** கெமிகலைக் கண்டுபிடித்தாலும் இவற்றைக்கொண்டு ஹோமம் பண்ணுவதற்கில்லை. (48/26)

5) நாம் சாஸ்திரங்களுக்கு அடங்கி அடி பணிந்து அதன் பிரகாரம் தான் செய்யவேண்டும். (48/28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) சாஸ்திரங்களில் அது போடுகிற விதிக்கு மாறாக அதுவே விலக்குத் தருகிற இடத்தில் மட்டுந்தான் நாமும் விலகிப் போகலாம், மற்றபடி மூலப்படிதான் செய்யவேண்டும். (49/39)

7) செயற்கை **(Artificial)** வஸ்திரம் சாஸ்திர ஸம்மதமான தில்லை. பருத்தியாகவோ பட்டாகவோதான் இருக்கவேண்டும். இப்போது கோல் - தாரிலிருந்து பண்ணுகிற அநேக அனாசார வஸ்துக்கள் தான் - பிளாஸ்ரிக் இதில் சேர்த்ததுதான் - ஸர்வ வியாபகமாயிருக்கின்றன. நம் சரீரத்தின் மேலேயே இம்மாதிரி உடுப்புப் போட்டுக் கொள்வது ஆசாரத்துக்கு தோஷம்தான். (49/43)

8) பழையதை, கள்ளை - ஏன் ஸோடா, ஐஸ்கிரீம், பிஸ்கட், ஓவல்டின் முதலானதுகளைக்கூட - நைவேத்யமாக வைப்போமா? (50/41)

9) சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிற ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்றை ''ஸப்ஸ்டிட்யூட்'' பண்ணக்கூடாது. (49/29)

## (VI) அளவுகள், கருவிகள்

1) யாகசாலைக்கு ''தேவ யஜனம்'' என்றும் பெயர். அதன் அமைப்பைப்பற்றி ஸகல விவரங்களும் வெகு நுணுக்கமாக கல்ப ஸுத்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ''சயனம்'' என்று செங்கல் வைத்துக் கட்டவேண்டிய யக்ஞ அமைப்புக்கள் உண்டு. இவற்றுக்கும் ரொம்ப **Minute** ஆக **details** (நுணுக்கமான, விவரங்கள்) தரப்பட்டுள்ளன. இதிலே கணித விஷயங்கள் உள்ளன என்று முன்னே சொன்னேன். ஹோமம் செய்கிற கரண்டியை எடுத்துக் கொண்டால அதில் தர்வீ, ஸ்ருக், ஸ்ரவம் என்று பல தினுசு, ஒவ்வொன்றுக்கும் ஓர் அளவு, இன்ன வஸ்துவால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று இருக்கிறது. இப்படியிப்படி கை முத்திரை பிடிக்க வேண்டும் என்ற விதி உள்ளது. எந்தச் சின்ன விஷயமும் விட்டுப் போகாமல் இப்படி அளவுகள், இன்ன மெடீரியல் என்பது எல்லாம் சொல்லியிருக்கும்.

அணு ஆராய்ச்சி,'ஸ்பேஸ் ரிஸர்ச்' என்று லாபரட்டரியில் செய்கின்ற போது எப்படி ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் அதிஜாக்ரதையுடன் செய்கிறார்களோ அப்படியே (இயற்கைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதீதமான) ஸுபர் நாச்சுரல் சக்திகளை லோக க்ஷேமத்துக் காக இழுத்துக் கொடுக்கிற யக்ஞங்களிலும் இண்டு இடுக்கு விடாமல் ஸகல அம்சங்களையும் ஜாக்கிரதையுடன் முறைப்படி செய்ய சாஸ்திரம் விரிவான விதிகளைக் கொடுத் திருக்கிறது. (37/22)

## (VII) கோயில் எப்படிக் கோயிலாகிறது

1) வேத மந்திரங்களைக்கொண்டு செய்யும் ப்ராண பிரதிஷ்டை யும், கும்பாபிஷேகமும் பூஜைகளும்தான் தெய்வ ஸான்னித் தியத்தை ஆலயங்களில் உண்டாக்குபவை. (66/9)

2) **வேத மந்திரகங்ளையேதான்** அந்த ஆலயங்களின் கோபுரங் களிலும், விமானங்களிலும், தெய்வமூர்த்திகளிலும் அப்படியே இறக்கி நிரப்பி வைத்து லோகத்துக்கெல்லாம் க்ஷேமத்தை ''ரேடியேட்'' பண்ணும்படி செய்திருக்கிறது. (66/25)

3) கும்பம் என்ற குடத்துக்குள் உள்ள மந்திர தீர்த்தத்தைக் கும்பாபிஷேகத்தில் கோபுர விமான கலசங்களின்மேலும் தெய்வ விக்ரகஹங்களின்மேலும் கொட்டித்தான் கோயிலைக் கோயிலாக்குகிறோம். (66/25)

## (VIII) தேவபாஷை

1) ஸமஸ்கிருதம் தேவ பாஷை என்றால் தேவர்கள் தங்களுக் குள் பேசிக் கொள்கின்ற பாஷை என்று அர்த்தம். இங்க்லாண்டில் இருக்கும் இங்கிலிஷ்காரர்கள் பேசுவதை இங்கீஷ் என்கிறோம். ப்ரான்ஸில், ஜெர்மனியில், ஜப்பானில், இங்கே பெங்காலில், மஹாராஷ்டாவில், மலையாளத்தில், உள்ள ப்ரெஞ்சுக்காரர்கள், மராட்டியர்கள், மலையாளத் தார்கள் பேசுகிற பாஷைகளை அந்தந்த தேசம், அந்தந்த ஜனக்கூட்டம், ஆகியவற்றின் பெயரை வைத்தே ப்ரெஞ்ச், ஜெர்மன், ஜப்பானிஸ், பெங்காலி, மராட்டி, மலையாளம் எனறெல்லாம் சொல்லுகிறோம். ஹிந்தியில் வ்ரஜ பாஷா மைதிலி என்றெல்லாம் பிரிவுகள் இருக்கின்றனவென்றால் அவையும் வ்ரஜம், மிதிலா என்ற இடங்களை வைத்து ஏற்பட்ட பெயர்கள்தான் அம்மாதிரி தேவபாஷை என்றால் தேவலோகத்தில் தேவர்கள் பேசுவது என்று அர்த்தம். இங்கிலீஷ்காரன் நம்மை ஆண்டால் அவனோடு பேசுவதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக நாம் இங்கிலீஷ் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிற தல்லவா? **அப்படியே லோகம் முழுவதையும் ஸூக்ஷ்மமாக இன்னதுறைக்கு இன்னார் என்று ஆள்வது தேவர்களேயாகை** யால் அவர்களுடைய பாஷையையும் நாம் சரியாக முறையாக தெரிந்துகொள்ளத்தானே வேண்டும்? கர்மானுஷ்டானங்களில் வரும் மந்த்ரங்களையும், சுலோகம் முதலானவற்றையும் நாம் சரியாகத் தெரிந்துகொண்டு சொல்வது தேவர்களோடேயே நாம் பேசுவதுதான்! **இதற்கு வ்யாகரண ஞானம் அவசியம் அல்லவா?**

ஞானம் மொழி கடந்தது:. பக்தியை அதாவது அன்பை எந்த மொழியிலும் வெளிப்படுத்தலாம். ஆனால் நாம் சாஸ்திரகர்மாவும் நிறையச் செய்தேயாகவேண்டிய நிலையில் தானே இருக்கிறோம்? அதனால் சாஸ்திரங்கள் அமைந்துள்ள ஸம்ஸ்கிருதத்தையும் சரிவரத் தெரிந்துகொள்ளத் தானே வேண்டும்? (95/10)

## (IX) தேவர்கள் யார்?

1) தேவர்கள் என்பவர்கள் பகவத் ஸ்ருஷ்டியில் உயர்ந்த சக்தி படைத்த ஓர் இனம். (22/37)

2) ஒரே பரமாத்மாதான் தன்னுடைய சக்தியைக் கொண்டே இந்தத் தேவதைகள் என்ற அதிகாரிகளை உண்டாக்கியிருக்கிறார். இயற்கை என்று நாம் சொல்லுகிறதில் **உஷ்ணம், மழை, காற்று, உணவு, ஸந்ததி, செல்வம், மனுஷ்யனின் உணர்ச்சிகள்** முதலான பல விஷயங்களையும் நிர்வாகம் பண்ணுவதற்காக இந்தத் தேவதைகளை நியமித்திருக்கிறார். நம்மைப் படைத்தது போலவே இந்தத் தேவதைகளையும் படைத்திருக்கிறார். (22/38)

3) லோக வாழ்க்கை நமக்கும் சகல ஜீவகுலத்துக்கும் அனுகூலமாக இருக்கவேண்டுமானால் பிரபஞ்ச சக்திகளை பரமாத்மாவின் உத்தரவின்படி நிர்வாகம் பண்ணிவரும் தேவதைகளின் அனுக்ரஹம் நமக்கு இருக்கவேண்டும் என்று சொல்லி, அவர்களின் அனுக்ரஹத்தைப் பெற்றுத் தரவே அவர்களுக்குப் பிரீதியாக யக்ஞங்களைப் பண்ண வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. (22/39)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) சிருஷ்டியில் மனுஷ்யர்களைவிட அதிகச் சக்தி உடையவர் களும் இருக்கிறார்கள். அவர்களையே தேவர்கள் என்பது. அவர்கள் இந்த லோகத்தில் பஞ்ச பூதங்களில் கரைந்து இருப்பதோடு, கண்ணுக்கு தெரிகிற ரூபத்தில் தேவலோகத் தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். மந்திரங்களை நன்றாக ஜபித்து சித்தி அடைந்தால், ஸுஷ்ம ரூபத்தில் அவர்கள் செய்கிற அனுக்ரஹங்களைப் பெறுவதோடு, தேவலோகத் தில் அவர்களுக்கு உள்ள ஸ்தூல ரூபங்களையும் தரிசனம் பண்ணலாம். இந்த மந்திரங்களுக்கு ஆதாரமான மூல சப்தச் சலனங்களால்தான் அவர்கள் பரமாத்மாவில் தோன்றி யது. எனவே இதையே திருப்பிச் சொன்னால் **மந்ரங்களைத் தேவதைகளின் சப்த ரூபம்** என்று சொல்லலாம். *(22/42)*

5) மனுஷ்யர்களை விட தேவர்கள் ஜாஸ்தி சக்தி பெற்றவர் களென்றாலும் அவர்களும் பூரண சத்தர்களல்ல! நிறைந்த நிறைவாக நிரம்பி விட்டவர்களல்ல. அவர்களுக்கும் ஆசைகள் உண்டு. தேவைகள் உண்டு. அவற்றை இந்த யக்ஞங்களே பூர்த்தி செய்கின்றன. *(22/43)*

6) யக்ஞங்கள் என்றால் ஒவ்வொரு தேவதைக்கும் மந்ர த்வாரா ஆஹுதிகளை அர்ப்பணம் பண்ணுவது என்று அர்த்தம். ஒரு விதத்தில் **அந்த மந்திரங்களே தேவதா ஸ்வரூபமாகவும்** இருக்கின்றன. இன்னொரு விதத்தில் ஆஹுதி செய்யப்படும் திரவியங்களைப் போலவே, இந்த மந்திராக்ஷரங்களும் தேவதைகளுக்கு 'ஆஹாரம்' மாதிரி ஆகி, **அவற்றின் சக்தியை விருத்தி பண்ணுகின்றன.** மந்திரம் என்பது இப்படி **Multi Purpose** (பல நோக்கங்கள்) உள்ளதாக இருக்கிறது. *(23/19)*

7) ஒரே பரமாத்மாவுக்காக இல்லாமல் பல தேவதைகளுக்கு ஆஹுதிகளை அர்ப்பணம் பண்ண வைப்பதே 'யக்ஞம்' *(22/37)*

8) யக்ஞத்திலே அனேக விதமான திரவியங்களை மந்திர பூர்வமாக அக்னியில் போடச் சொல்லியிருக்கிறது. இப்படிப் போடுவதற்கு ஹோமம் என்று பெயர். அக்னியில் போட்டாலும் அக்னிக்கே இந்தத் திரவியங்களை சமர்ப்பணம் பண்ணு வதாக அர்த்தமில்லை. அக்னியை உத்தேசித்து மந்திரங் களைச் சொல்லி அதில் போடுவது மட்டும்தான் அக்னியை சேர்கிறது. ஆனால் மற்றத் தேவதைகளான ருத்திரன், விஷ்ணு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன், மாதரிச்வன் (வாயு) ஸோமன் முதலானவர்களுக் கான ஆஹுதியில்தான் போடவேண்டும். அக்னி இவற்றைத் தானே எடுத்துக்கொள்ளாமல் இவற்றின் ஸாரத்தை அந்தந்த தேவதைகளுக்கு அனுப்பி வைப்பான். பல அட்ரஸ்களுக்கு எழுதின கடிதங்களை ஒரே தபால் பெட்டியில் போடுகிற மாதிரி. பல தேவதைகளுக்குமான ஹவிஸ்களை (அவிகளை) அக்னியொன்றிலேயே ஆஹுதி பண்ணவேண்டும். (22/37)

9) அந்த வேத மந்திரங்களைச் சொன்னாலே சிருஷ்டியில் பல வித அதிகாரங்களைப் பெற்றிருக்கும் தேவ சக்திகளை அந்த Sound Vibrations கள் ஒலி அதிர்வுகள் பிடித்துக் கொண்டு வரும். யக்ஞத்தில் இப்படிப்பட்ட மந்திரங்களச் சொல்வது கடிதத்தில் அட்ரஸ் எழுதுகிற மாதிரி. இப்படி அட்ரஸ் பண்ணி ஹோமம் செய்தால்தான் ஆஹுதியை, அக்னி தேவர்களிடம் சேர்க்கிறார். (22/42)

10) யக்ஞத்தில் ஒவ்வொரு தேவதை பற்றியும் மந்திரம் சொன்னால் அந்தத் தேவதை அங்கு ஆவிர்பவமாகிறது. நல்ல பக்குவி களுக்கு இது பிரத்தியக்ஷமாகவே தெரியும். தேரியாவிட்டா லும் அந்தத் தேவதாசக்தி ஸூக்ஷ்மமாக வெளிப்பட்டிருக்கும். ஆனால் நேரே அதற்கு ஆஹுதி தரக்கூடாது. பத்திரம் எழுதினால் Bond எழுதினால் அதில் ஸ்டாம்ப் ஒட்டவேண்டும். ரிஜிஸ்திரர் முத்திரை போட வேண்டும் என்றெல்லாம் இருப்பது போல் வேதத்தில் சொல்லியிருக்கிற விதிகளின்படி போட்டால்தான் அது அவர்களுக்கு எந்த விதத்தில் ஏற்கத் தக்கதோ அந்தவிதத்தில் போய்ச் சேரும்.

''அக்னி எரிந்து விட்டதே, மிஞ்சியதை யக்ஞ இஷ்டமாக (பிரஸாதமாக) யாகம் பண்ணினவர்களே சாப்பிட்டு விட்டார் களே அது எப்படி தேவர்களை அடைய முடியும்?'' என்று சந்தேகப்படக்கூடாது. தேவர்கள் நம்மாதிரி பாஞ்ச பௌதிக மான (பஞ்ச பூதமயமான) சரீரம் படைத்தவர்களல்ல. எனவே நமக்குள்ள மாதிரி ஸ்தூலமான ஆஹாரம் அவர் களுக்குத் தேவை இல்லை. நமக்குங்கூட ஆஹாரங்களை வயிற்றில் உள்ள ஜாடராக்னி எரித்து அதன் சத்தை மட்டுந்தானே ரத்தமாக்கி அனுப்புகிறது! இப்படியே யக்ஞ அக்னியானது ஆஹுதிகளின் சூக்குமமான ஸாரத்தை தேவர் களுக்கு அனுப்புகிறது. (22/42)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) நம் ஒவ்வொரு தேஹத்திலும், அங்கங்களுக்குள்ளே அவை ஒவ்வொன்றுக்கும் அதிதேவதையான ஒரு தேவன் இருக்கி றான். கண்ணில் ஸுர்யன், கையில் இந்திரன் என்றிப்படி நமக்குள் ஆத்யாமிகமாக தேவ சக்திகள் இருக்கின்றன. இது தவிர ஒவ்வொரு வ்யோவஸ்தையிலும் (வயசுக் கட்டத்திலும்) ஒவ்வொரு தேவதைக்கு நம்மேல் ஆதிக்கம் இருக்கிறது. (35/33)

12) வேடிக்கை என்னவென்றால் ராக்ஷஸ ஜாதியிலேயே பல விதம் இருந்தாலும் அந்த **ராக்ஷஸ ஜாதி என்பதே பல விதமான தேவ ஜாதிகளில் ஒன்றுதான்!** தேவர்கள் என்று பொதுவாக நாம் சொல்பவர்களோடு ராக்ஷஸர்கள் சண்டை போட்டதாகவே புராணங்களில் பார்ப்பதால் அவர்கள் வேறே ஜாதி, இவர்கள் வேறே ஜாதி என்று தோன்றினாலும் வாஸ்தவத்தில் ராக்ஷஸர்களும் **தேவ ஜாதிகள் பலவற்றுக் குள்ளேயே தாழ்ந்து தாழ்ந்து போய் க்ரூரமாக இருக்கும் ஒரு பிரிவுதான்!** அஸுரர்கள் என்பவர்கள்தான் தேவஜாதிக்கு முற்றிலும் வேறானவர்கள்! ஸுரர் என்ற தேவருக்கு நேரெதிர் அஸுரர்தான். பேச்சுவழக்கிலும்கூட "தேவாஸுர" என்கிறோமே தவிர "தேவ ராக்ஷஸ" என்று சொல்வதில்லையல்லவா?.... இந்த ராக்ஷஸ ஜாதிக்குள் அப்புறம் பல பிரிவுகள் உப ஜாதிகள் - மனுஷ்ய ஜாதியிலேயே நாலு ஜாதி அதில் அப்புறம் ஒவ்வொரு ஜாதியிலும் ஸப் - ஸெக்குகள் என்று இருக்கிறது போல அப்படி ராக்ஷஸ ஜாதியைச் சேர்ந்த ஒன்று தான் ப்ரம்ம ரக்ஷஸ்! பிசாசு மாதிரியான ஆவி வகைகளைச் சேர்ந்தது அது. ஆச்சர்யமாயிருக்கலாம் **பிசாசு கூட தேவ ஜாதியில் வருவது தான்!** (95/15)

## (X) வழிபாடு - நேராக அல்ல

1) பிற மதங்கள் எல்லாம் ஒரே ஸ்வாமியைத்தான் நேராக வழிபடும். ஒரே கடவுளிடத்தில் நேராகப் பிரார்த்தனை செய்யும்.

பல தேவ சக்திகளைப் பிரீதி செய்கிற யாக யக்ஞங்கள் மற்ற மதங்களில் இல்லை.

நம்முடைய மதத்தில் சன்னியாஸிகள்தாம் சாக்ஷாத் பரமாத்மா வையே நேராக வழிபடலாம். மற்றவர்கள் தேவதைகளைப் பிரீதி பண்ணி தெய்வங்களுடைய அனுக்கிரகத்தால் நன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையவேண்டும். தேவதைகளைப் பிரீதி பண்ணத்தான் பல ஹோமங்கள் யக்ஞங்கள் எல்லாம் பண்ணுகிறோம்.

ஒரு பெரிய ராஜா இருந்தால் எல்லாரும் ராஜாவிடம் நேரில் போகமுடியுமா? அந்த ராஜாவின் பரிபாலனத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தர்களிடம் குடிமக்கள் நெருங்கித் தங்களுக்கு வேண்டிய அனுகூலங்களைப் பெறுகிறார்கள். உத்தியோகஸ்தர் தாங்களாகவே செய்வதில்லை. அரசன் உத்தரவுப்படிதான் ஜனங்களுக்கு அனுகூலம் செய்கிறார் கள். ஆனாலும் ''அரசன்தானே செய்கிறான்'' என்று அரசனிடத்தில் குடிமக்கள் நேராகப் போகமுடியாது.

அப்படித்தான் நம் மதத்தில் சில வழக்கங்கள் இருக்கின் றன. பரமேஸ்வரன் மகா சக்கரவர்த்தி, ஸகல ஜனங்களும் குடிமக்கள், வருணன், அக்கினி, வாயு போன்ற பல தேவதைகள் சக்கரவர்த்தியின் உத்தியோகஸ்தர்கள். இவர்கள் மூலமாக நாம் பல நன்மைகள் அடையவேண்டும். அதற் காகவே தேவர்களுக்கு சக்தி அளிக்க யாகம் பண்ணு கிறோம். அக்னி மூலமாக நாம் கொடுக்கிற ஹவிஸ்கள் தேவர்களுக்குச் சேர்ந்து ஆஹாரமாகின்றன. (23/4)

## (XI) தேவதாஸி சமாச்சாரம்

1) ஈசுவரனுக்குச் செய்கின்ற அறுபத்து நாலு உபசாரங்களில் சங்கீதத்தோடுகூட நிருத்தமும் உபசாரமாகச் சொல்லப் படுகிறது. (8/23)

2) ஈச்வரனுக்கு நாட்டிய உபசாரம் நடக்க வேண்டுமென்பதில் தான் தேவதாஸிகள் என்று ஏற்பட்டது. 'தேவதாஸி' என்பதற்கு நேர்த்தமிழ் 'தேவஅடியாள்'. ஈச்வரனின் அடிமை என்று அர்த்தம். அவனையே கல்யாணம் பண்ணிக்கொண்ட தாகப் பொட்டுக் கட்டிக்கொண்டு அவனுக்கு ந்ருத்யோபசாரம பண்ணவேண்டியவள். நடைமுறையில் இது வேறு எப்படியோ போய்விட்டது. தேவதாஸி தடுப்புச் சட்டம் என்றே ஸமீபத்தில் ஸர்க்கார் செய்ய வேண்டியதாகி விட்டது. தேசத்தின் ஒழுக்கத்தைக் காப்பாற்ற இப்படிச் சில கார்யம் பண்ண வேண்டியிருக்கிறது. ஆனாலும் சாஸ்திர பூர்வமாக விதித்த ஒரு உபகாரம் ஸ்வாமிக்கு நடப்பதற்கில்லாமல் ஆகிவிட்டதே என்றும் இருக்கிறது. (55/34)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிந்தனைக்குச்

# சில

# கருத்துக்கள்

சாமிஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (1) அன்புள்ள வாசகர்களே!

"காஞ்சிப் பெரியவர்" என்று பெருமையுடன் போற்றப்படும் "ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்" சொல்லியுள்ள கருத்துக்களை இதுவரை படித்தீர்கள்.

சொன்னவர் சாஸ்திரங்களிலே மிகப் பெரியவர். அவர் சொல்லிலே பழுதிருக்கக் காரணமில்லை. ஒரு தடவைக்குப் பல தடவைகள் அவர் அருளியுள்ள கருத்துக்களைத் திரும்பத் திரும்பத் படியுங்கள். அத்தனையுமே நமது சமூகம் முழுவதுமே அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய மிகமிக முக்கியமான கருத்துக்கள்.

பிராமணன் ஆசாரம் பற்றியும், அந்த ஆசாரத்தின் அவசியம் பற்றியும், அந்த ஆசாரம் கெட்டுப் போனால் பிராமண மந்திர பூசைகளின் பலனே விபரீதமாகி விடுவது பற்றியும் அவர் சொல்லியுள்ள கருத்துக்களை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

மந்திரங்கள் பற்றியும், அணுவின் ஆற்றலைவிட மந்திரங் களின் ஆற்றல் அதிகம் என்பது பற்றியும், மந்திரங்களைச் சொல்லும்போது அட்சர சுத்தமாக அவற்றைச் சொல்ல வேண்டி யதன் அவசியம் பற்றியும் அவர் சொல்லியிருப்பதை எல்லாம் மறுபடியும் படித்து நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

பல்லுப் போனால் சொல்லும் போய்விடும். பல்லுப்போனவன் மந்திர பூசைக்கு உதவான் என்பதையும் தெளிவாகவே சொல்லி யிருக்கிறார்.

"சப்த தோஷம்" வந்துவிடும் என்கிறார்!

பல்லுப் போனால் மட்டுமல்ல —

பல்வலி இருந்தால்கூட மந்திர உச்சரிப்பு சரியாக இருக்காது.

கும்பாபிஷேகம் பற்றி அவர் அளித்துள்ள விளக்கங்கள் மிக மிக முக்கியம்

கோயில் கோயிலாக ஆவது —

மந்திர உச்சாடனங்களினால் தேவதா சக்திகளை கும்பத்தில் ஏற்றி அந்தக் கும்ப நீரை ஆலய விக்கிரகங்களின்மீதும் விமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலசங்களின்மீதும் கோபுர கலசங்களின்மீதும் அபிஷேகம் செய்வதனால்தான் என்கிறார்.

இப்படிக் கும்பாபிஷேகம் செய்யும்போது – ஆசாரக் குறைவான பிராமணர்கள் கிரியைகளில் பங்குகொண்டாலோ, மந்திரம் தப்பானாலோ, மந்திர உச்சாடனத்தில் தவறு ஏற்பட்டாலோ, கிரியைகளில் ஏதாவது தப்புக்கள் வந்துவிட்டாலோ, அளவுப் பிரமாணங்களிலே குறைவு நேர்ந்தாலோ, பூசைத்திரவியங்களிலே கலப்படம் இருந்தாலோ ——

என்ன நடக்கும்?

நன்மைதரும் தேவதா சக்திகள் கோயிலிலே குடியேறுவதற்குப் பதிலாக நம்மைப் பிய்த்துப் பிடுங்கித் தொல்லை தரும் துட்ட தேவதைகளே அங்கே குடியேறும்!

அப்புறம் அந்தக் கோயிலிலே வழிபாடு செய்யும்போது கெட்ட பலன்களே தொடர்ந்து வந்து கொண்டிருக்கும்!

நாட்டிலே நடைபெறும் பல கெட்ட காரியங்களுக்கான காரணம் இப்போது புரிகிறதா?

"தேவர்கள் யார்?" என்பது பற்றியும், "தேவ பாஷை" எனப்படும் சமஸ்கிருதமொழியிலே பூசை மந்திரங்களைச் சொல்லி வழிபாடு செய்யவேண்டியதன் அவசியம் பற்றியும், "வழிபாடு நேராக அல்ல" என்றும் காஞ்சிப் பெரியவர் சொல்வதை எல்லாம் திரும்பத் திரும்பப் படித்துப் புரிந்து கொள்ளுங்கள்!

"பிராமண மந்திர பூசை"களின் ஆபத்து அப்போது தான் கொஞ்சமாவது புரியும்!

பிராமண மந்திர பூசைகளிலே
நம்பிக்கை கொண்டவர்கள்
பிராமணமத சாஸ்திரங்களை
நம்பித்தான் ஆகவேண்டும்.

பிராமணமத சாஸ்திரங்களை நம்புவதானால் காஞ்சிப் பெரியவர் கருத்துக்களை சந்தேகமில்லாமல் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.

பிராமணமத சாஸ்திரங்களை அவர் போலக் கற்றுத் தேறியவர் யாருமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய கருத்துக்களைத் தெரிந்துகொண்டபின் நாட்டிலே நடைபெறும் பிராமண மந்திர பூசைகளை கொஞ்சம் அவதானித்துப் பாருங்கள் -

அப்போதுதான் இந்தப் பிராமண மந்திர பூசைகளினால் ஏற்படும் **அபாயங்கள், ஆபத்துக்கள்** எல்லாம் நமக்குப் புரியும்!

## (உ) திருமூலர் தவமொழி

காஞ்சிப் பெரியவர் ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகள் சொன்னதை முன்னர் பார்த்தோம்.

திருமூலர் சொல்வதையும் கொஞ்சம் பார்ப்போமா?

நமது அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராக வைத்து மிகவும் மரியாதையுடன் போற்றப்படுபவர் திருமூலர்.

சைவசமய தோத்திர நூல்களாக உள்ள பன்னிரு திருமுறை களிலே பத்தாவது திருமுறையாக இடம்பெற்றிருப்பது இவர் செய்த "திருமந்திரம்"

சைவத்திலே இரண்டு வகையான நூல்கள் உண்டு. சில தோத்திர நூல்கள், சில சாத்திர நூல்கள்.

'திருமந்திரம்' ஒன்றுதான் தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் இருப்பது.

திருமூலர் மிகப் பெரிய ஞானி
சித்தர்களுக்கெல்லாம் சித்தர்.

முத்து முத்தான பல தத்துவக் கருத்துக்களைத் தனது 'திருமந்திரம்' நூலிலே தந்திருக்கிறார்.

படித்துப் புரிந்துகொள்வதற்கு மிகவும் சிரமமான நூல் திருமந்திரம். கற்கக் கற்க பல ஆழமான அற்புதமான கருத்துக் களைத் தெரிவிப்பது. சிந்தைக்கு விருந்தாகி அளவில்லா இன்ப வெள்ளத்திலே திளைக்க வைப்பது. கற்றவர் அத்தனை பேருமே வியந்து வியந்து போற்றும் அருமை உடையது.

இந்நூலிலே மிகச்சில எளிமையான பாடல்களும் உள்ளன.

சாதாரணமாக எல்லாருமே அவசியம் தெரிந்துகொள்ள வேண் டிய உண்மைகளைத்தான் எளிமையான பாடல்களாகத் தந்திருக் கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தந்துள்ள பாடல்களிலே பிராமணன் ஆசாரம் பற்றியும், கோயில் பூசைகள் பற்றியும் எடுத்துக் காட்டவேண்டிய பாடல்கள் பல உள்ளன.

ஆயினும் நூலின் விரிஞ்சி ஒரே ஒரு பாடலை மட்டும் பார்ப்போம்.

இதோ அந்தத் திருமந்திரம் —

**பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்**
**போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்**
**பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமும் ஆமென்றே**
**சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே.**

"பேர் கொண்ட பார்ப்பான்" என்றால் பெயரளவிலே மட்டும் தன்னைப் பார்ப்பான் என்று சொல்லிக்கொண்டு நடைமுறையில் "பிராமணனுக்குரிய ஆசாரங்களோடு ஒழுகாத பார்ப்பான்" என்பது பொருள்.

"தண்டச் சோறுண்ணும் பார்ப்பான்" என்று பாரதி சொல்வது இந்தப் பார்ப்பானைத்தான்!

இப்படிப்பட்ட பார்ப்பான் பூசைகள் செய்தால் - "அரசனுக் குப் பொல்லாத வியாதியும் நாட்டுக்குப் பெரிய பஞ்சமும் வந்து சேரும்" என்று சொல்கிறது இத்திருமந்திரம்.

"ஆசாரம் கெட்ட பிராமணன்
பூசைகள் செய்தால்
கேடுகள் பல வந்துசேரும்"

என்பது திருமூலர் தெரிவிக்கும் உண்மை!

## (3) பாரதியின் கருத்து

பாரதியின் சில கருத்துக்களையும் சிறிது பார்ப்போம்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெருங்கவிஞன் பாரதி. உலக மகாகவிகள் வரிசையிலே வைத்து மதிக்கப் படுபவன்.

தமிழுக்குப் புதுவீறும் வேகமும் தந்தவன்.

பார்ப்பனக் குலத்திலே பிறந்தவன். 'பொய்ம்மைப் பார்ப்பாரை' மிகக் கடுமையாகச் சாடியவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி நாஸ்திகன் அல்ல!
பரம ஆஸ்திகன்

"பக்திநெறி" என்ற நெறியிலே நின்று தெய்வப்பாடல்கள் பல தந்தவன்.

"சக்தியென்று நேரமெல்லாம் தமிழ்க்கவிதை பாடி பக்தியுடன் போற்றி நின்றால் பயம் அனைத்தும் தீரும்" என்பது போன்ற பல கவிதைகள் மூலம் "பக்தி"யின் சிறப்பையும் "தமிழ்க்கவிதை பாடி பக்தியுடன் போற்றி நிற்பதன்" அவசியத்தையும் தெரிவித்த வன்.

தனது தாயின் தந்தையைப் பற்றிக் கூறும்போது "தமிழ்ச் செய்யுளால் மூன்று போழ்தும் சிவனடி ஏத்துவோன்" என்று சொல்வதன் மூலம் தனது உள்ளக் கருத்தைத் தெளிவாகக் காட்டியவன்.

இத்தகைய பாரதி ——

"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே" என்றும் "தண்டச் சோறுண்ணும் பார்ப்பான்" என்றும் பாடியிருப்பது கவனிக்கத் தக்கது.

"விதியே விதியே தமிழச் சாதியை என்செய நினைத்தாய்" என்று வருந்தும் பாரதி ——

அழுத்தம் திருத்தமாக அடித்துச்சொல்லும் முக்கியமான கருத்து ——

"பொய்ம்மைச் சாத்திரம் புகுந்திடின்
மக்கள் பொய்ம்மையாகிப்
புழுவென மடிவர்" என்பது!

பொய்ம்மைச் சாத்திரம்தானே இன்று தமிழ் வழங்கும் நிலம் முழுவதும் கொடிகட்டிப் பறக்கிறது.

முட்டாள்கள் மந்திரிகளானால் கெட்ட பிராமண மதமே கொடி கட்டிப் பறக்கும் என்பதுதானே உண்மையாகி இருக்கிறது.

தமிழன் புழுவென மடிவதற்கு வேறு காரணம் என்ன வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ் நாட்டிலே சாஸ்திரங்கள் இல்லை. உண்மையான சாஸ்திரங்களையும் வளர்க்காமல் இருப்பவற்றையும் மறந்து விட்டு தமிழ்நாட்டுப் பார்ப்பார் பொய்க்கதைகளை மூடரிடம் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்" என்று எழுதும் பாரதி —

**"முன்னாளிலே ஐயரெல்லாம் வேதம் ஓதுவார்**
**மூன்றுமழை பெய்யுமடா மாதம்**
**இந்நாளில் பொய்ம்மைப் பார்ப்பார் இவர்**
**ஏது செய்தும் காசுபெறப் பார்ப்பார்"**

என்று பொய்ம்மைப் பார்ப்பாரைத் தோலுரித்துக் காட்டும் பாரதி "சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்" "நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு" என்று கொதிப்பதோடு இழித்தும் பழித்தும் பேசுகிறான்.

ஓர் உண்மை தெளிவாகத் தெரிகிறது —

"ஆசாரம் கெட்ட பிராமணன் செய்யும் பூசைகளால் கேடுகள் பல வந்துசேரும்" என்பதை பாரதியும் ஏற்றுக் கொள்கிறான்.

"புசிப்பது உம்பரின் நல்லமுது என்று எண்ணி, புலையர் விற்றிடும் கள் உண்ணலாகுமோ?" என்று கேள்வி எழுப்பும் பாரதி —

"அசுத்தர் சொல்வது கேட்கலீர், காளையீர்" என்று அறிவுரையும் சொல்கிறான்.

ஆனால் நமது நிலை என்ன?

அசுத்தர் சொல்வது கேட்கும் தலைவிதியாகத் தானே நமது சமயநிலை இருக்கிறது!

"உம்பரின் நல் அமுது" என்ற நினைவோடு "கெட்ட புலையர் விற்றிடும் கள்"ளைத்தானே உண்டு வருகிறோம்.

கெட்டுப்போன பிராமண மந்திர பூசைகளை அங்கீகரிப்பதற்கும் புலையர் விற்றிடும் கள் உண்பதற்கும் இடையிலே வேறுபாடு எதுவும் இல்லை.

பெருநாசம் விளைவித்து நாட்டையே பாழ்படுத்தும் நிலையிலே தான் பிராணம மந்திர பூசைகள் வளர்ந்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டுப்போன பிராமண மந்திர பூசைகளை ஏற்றுக்கொள் வதைத்தான் "மாமூல் பக்தி" என்கிறான் பாரதி!

"லோக சேமத்துக்கும் லோகாபிவிருத்திக்கும்
இந்த மாமூல் பக்தி எத்தனை பெரிய இடையூறு
என்பதை நம்மவர் இன்னும் நன்றாகத்
தெரிந்து கொள்ளவில்லை"

- என்ற பாரதியின் கருத்து எப்போதுமே நாம் நினைவில் கொள்ளவேண்டிய ஒன்று.

பிராமணனின் ஆசாரம், மந்திர சுத்தம், சுத்தமான உச்சாடனம், சரியான கிரியை முறை என்ற இதுமாதிரியான எதுபற்றியும் கவலைப்படால் 'பிராமண மந்திர பூசை'களை ஏற்றுக் கொண்டால் அதனால் **உலக நலனே கெட்டுப்போகும்** என்பது பாரதி கருத்து.

## (4) எத்தனையோ அசிங்கங்கள்

பிராமணமத சாஸ்திரங்கள் சொல்லுகின்ற மிகத்தெளிவான கருத்து —

"ஆசாரம் கெட்ட பிராமணன்
பூசைகள் செய்தால்
கேடுகள்பல வந்துசேரும்" என்பது!

காஞ்சிப்பெரியவர், திருமூலர், பாரதி இப்படி எல்லோருமே இந்தக் கருத்தைத்தான் சொல்கிறார்கள்.

பிராமணனுக்குக் குடுமி அவசியம்.

இதுபற்றிக் காஞ்சிப்பெரியவர் தெளிவாகவே கூறியிருக்கிறார்.

'குடுமி'யை வெட்டி எறிந்துவிட்ட பிராமணன் பதிதன்; படு பாதகன்!

அவன் அப்புறம் பிராமணனே அல்ல.
ஆனால் என்ன பார்க்கிறோம்?

குடுமியை வெட்டி எறிந்துவிட்ட பிராமணன் கோயில் பூசைகள் செய்வது மட்டுமல்லாமல் கும்பாபிஷேகம் போன்ற கிரியை களிலும் பங்குபற்றுவதைப் பார்க்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இப்படி எத்தனையோ அசிங்கங்கள்.

இப்படியான "அசிங்க"ங்களால் வந்து சேரக்கூடிய பாதக மான விளைவுகள் மிகப் பல!

**பிராமண மந்திர பூசைகளின்**
**விளைவுகளைப் பற்றிச் சரியாகத்**
**தெரியாத காரணத்தினாலேதான்**
**நம் மக்களிலே பலர்**
**பிராமண மந்திர பூசைகளிலே**
**மயங்கி நிற்கிறார்கள்!**

பிராமணமத சாஸ்திரத்திற்கு விரோதமாக நடைபெறும் பிராமண மந்திர பூசைகள் அத்தனையும் **கெட்ட பலன்களையே** கொண்டுவந்து சேர்க்கும் என்பதை பிராமண மத சாஸ்திரங்களே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றன.

## (5) வறுத்த வித்து

பிராமணமத சாஸ்திரங்களின்படி பிராமணனின் ஆசாரம் என்பது வெறுமனே வெளிப்பூச்சு அல்ல! கூத்துக்குப் போடும் வேடமும் அல்ல!

காஞ்சிப் பெரியவர் சொல்வதையே பாருங்கள்! ஒருவன் "பிராமணன்" ஆவதென்பது எளிதான காரியமல்ல!

பிராமண குலத்திலே பிறக்கவேண்டும். அது மட்டும்போதாது. அப்புறம் எத்தனையோ சடங்குகள் இருக்கின்றன. அன்னப் பிரசானம், காது குத்துதல், குடுமி வைத்தல், பூணூல் போடுதல் என்று எத்தனை எத்தனையோ மந்திர பூர்வமான சடங்குகள்.

அவன் கடைப்பிடிக்க வேண்டிய விரதங்கள், அனுஷ்டானங்கள் என்று எத்தனையோ காரியங்கள் இருக்கின்றன.

அவனுடைய வாழ்க்கை முறையே தனியானது. அரிக்கின்ற மனம் இழுக்கின்ற இழுப்புக்கெல்லாம் அவன் போகக்கூடாது. ஆசைவயப்பட்டுக் காரியங்கள் செய்யக்கூடாது.

சொந்த மனைவியோடுகூட குறிப்பிட்ட சில நாட்களில் தான் அவன் உடலுறவு கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமண ஆசாரம் பற்றி தனி நூலே எழுதலாம். அவ்வளவு விரிவானது. காஞ்சிப் பெரியவர் சொல்லியிருப்பதை மறுபடியும் ஒருமுறை படித்துப் பாருங்கள்.

அணு உலைகளிலே வேலை செய்பவர்களுக்கு "டிஸிப்பிளின்" முக்கியம், அவர்களுக்கு ஏகப்பட்ட கட்டுப் பாடுகள்; கடுமையான சட்டதிட்டங்கள்! அப்படி இல்லாவிட்டால் அணு உலைகளில் கசிவு ஏற்பட்டு நாடே நாசமாகிவிடும்.

மந்திரங்களின் ஆற்றல் அணுவின் ஆற்றலைவிட அதிகம்.

எனவே மந்திரங்களைக் கையாளுகிற பிராமணனும் மிகவும் கடுமையான ஒழுக்கவிதிகளுக்கும் இறுக்கமான சட்டதிட்டங் களுக்கும் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும்.

ஆசாரசீலனான பிராமணன்தான் மந்திர பூசைகளைச் செய்ய லாம். ஆசாரம் கெட்டுப்போகாத பிராமணனுக்குத்தான் நன்மை செய்யும் தேவதா சக்திகள் வசப்படும்.

அவன் எப்பொழுது ஆசாரத்திலிருந்து வழுவினானோ அப்பொழுதே துட்ட தேவதைகள் அவனை மொய்க்கத் தொடங்கி விடும்.

துட்ட தேவதைகள் இயல்பாகவே
வக்கிரமான குணம் கொண்டவைகள்

ஆசாரம் கெட்ட பிராமணன் செய்யும் மந்திர பூசைகளினால் வக்கிரமான குணம்கொண்ட துட்ட தேவதைகள் தரும் கெட்ட பலன்களே நமக்குக் கிடைக்கும்.

திருவள்ளுவரும் பிராமணனின் ஆசாரம் பற்றிக் குறிப்பிட்டிருக் கிறார். திருவள்ளுவர் சொல்லியுள்ள கருத்தை காஞ்சிப்பெரிய வரும் பூரணமாக ஒப்புக்கொள்கிறார்.

**"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்"**

'ஒத்து' என்பது வேதம், பார்ப்பான் வேதம் கற்றவனாக இருக்க வேண்டும்.

சமஸ்கிருத மந்திரங்களை தமிழ் எழுத்துக்களிலே எழுதி பாடமாக்கி ஒப்பிப்பவன் பார்ப்பானே அல்ல. அவனும் ஆசாரம் விட்ட பார்ப்பானேதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் கற்காத ஒருவனுக்குத் தன்னைப் 'பார்ப்பான்' என்று சொல்லிக் கொள்ளும் யோக்கியதை இல்லை.

பார்ப்பான் அவன் கற்ற வேதத்தை மறக்கவே கூடாது.

அவன் கற்ற வேதத்தை ஒருவேளை பார்ப்பான் மறந்தாலுங் கூட —

பார்ப்பானுக்கென்று விதிக்கப்பட்ட "ஆசாரங்"களிலிருந்து அவன் விலகவே கூடாது!

தனக்குரிய ஆசாரங்களிலிருந்து அவன் விலகுவானேயானால் அவனது பிறப்பே கெட்டுவிடும்.

"பிறப்புக் கெட்டுவிடும்" என்றால் அவனது "பிராமணத்துவமே" போய்விடும் என்று அர்த்தம்!

"பிராமணத்துவம்" போய்விட்ட ஒருவன் அப்புறம் என்ன செய்தாலும் "பிராமணன்" ஆகவே முடியாது!

இந்தப் பிறவியில் அவன் மறுபடி "பிராமணன்" ஆக முடியாது!

ஒரு பெண் வாழ்க்கையில் ஒருமுறைதான் தனது 'கன்னிமை'யை இழக்கிறாள்.

ஒரு தடவை தனது 'கன்னிமை'யை இழந்த பெண்ணொருத்தி பின்னர் என்ன செய்தாலும் தனது 'கன்னிமை'யை திரும்பப் பெறமுடியாது.

அதே மாதிரித்தான் பிராமணனின் "பிராமணத்து" வமும்!

ஒரு தடவை தனது ஆசாரத்தைக் கைவிட்ட பிராமணன் திரும்ப வும் தனது "பிராமணத்துவ"த்தைப் பெற முடியாது. அப்புறம் அவன் பிராமணனே அல்ல!

"குடுமி"யை வெட்டி எளிந்துவிட்டு ஏதேதோ கூத்தடித்த பிராமணன் மறுபடியும் "குடுமி"யை வளர்த்துக்கொண்டு பிராமணன் ஆகமுடியாது.

ஆசாரத்தையெல்லாம் கைவிட்டு "உத்தியோகம்" பார்த்த பிராமணன் "பென்ஷன்" ஆனதன் பின்னர் மந்திர பூசைக்கு வரமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மேலோட்டமாகப் பார்க்கும்போது "நல்ல வித்து"க்கும் "வறுத்த வித்து"க்கும் இடையிலே வேறுபாடு தெரியாது.*

*ஆசாரம் கெட்ட பிராமணன் "வறுத்த வித்து" மாதிரி! என்ன செய்தாலும் முளைக்காது!*

*'வறுத்த வித்து' என்பதைவிட மோசம்! 'வறுத்த வித்து' முளைக்காது விடுவதோடு சரி! ஆனால் ஆசாரம் கெட்ட பிராமணன் பூசைகள் செய்தாலோ கெட்ட பலன்கள் பல பெருவாரியாக வந்து சேர்ந்துவிடும்!*

## (௬) சைவம் வேறு பிராமண மதம் வேறு

*'சைவ சமயம்' என்பதும் 'இந்துமதம் என்பதும் ஒன்றல்ல!*

*'பிராமண மதம்' என்பதைத்தான் 'இந்து மதம்' என்று பெயர் மாற்றி இருக்கிறார்கள்.*

*சைவம் வேறு; பிராமண மதம் வேறு.*

*பலருக்கும் இது தெரிவதில்லை.*

*அடிப்படையிலேயே இரண்டுக்குமிடையிலே மிகப் பெரிய வேறுபாடுகள் உள்ளன.*

*இரண்டும் ஒன்றெனக் கருதிக் குழம்பிக் கிடப்பவர்கள் பல பேர்! "படித்தவர்கள்" என்று சொல்லப்படுகின்றனவர்களிலேயே நிறையப்பேர் இப்படிக் குழம்பிக் கிடக்கிறார்கள். சொல்லப் போனால் இந்தக் குழப்பத்துக்குக் காரணமே இந்தப் "படிப்பாளி" கள்தான்!*

*சைவம் தமிழ்நெறி. தமிழ் மக்கள் மத்தியிலே முளை கொண்டு வளர்ந்து வாழ்ந்து நிற்கும் நெறி.*

*பிராமணமதம் புறத்திலிருந்து வந்து இங்கே புகுந்த நெறி.*

*ஒரு காலத்திலே புறத்திலிருந்து வந்த சமணம் பௌத்தம் என்ற மதங்களும் தமிழ் மக்கள் மத்தியிலே பரவி இருந்தன. கொஞ்சம் வேகமாக வந்தன. கொஞ்சம் வேகமாகப் பரவின. வந்த வேகத்திலேயே போயும் விட்டன.*

*புறத்திலிருந்து வந்த கிறிஸ்தவமும் இஸ்லாமும் தமிழ் மக்கள் மத்தியிலே பரவி இப்போதும் உள்ளன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே மாதிரித்தான் ——

புறத்திலிருந்து வந்து புகுந்து இங்கே பெரிதாகக் கடை பரப்பி நிற்கின்ற மதம்தான் பிராமண மதம்!

தமிழ் நெறியான சைவத்தின் அடிப்படை **பக்தி!**

புறநெறியான பிராமண மதத்தின் அடிப்படை **பிராமண மந்திர பூசைகள்!**

அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் உள்ள தொடர்பு போன்றதுதான் பக்தி நெறிக்கும் பிராமண மந்திர பூசைகளுக் கும் உள்ள தொடர்பு!

'பக்தி' என்பதனோடு கூடவே "ஞானம்" என்பதையும் சேர்த்துக் கொண்டால் அதுதான் முழுமையான "சைவம்"!

பக்தியினால் ஞானம் வரும். ஞானத்தினால் பக்தி வரும்.

'பக்தி' என்பதற்கும் 'ஞானம்' என்பதற்கும் மொழி முக்கிய மல்ல! இது பிராமணமத காவலரான காஞ்சிப் பெரியவரே ஒப்புக் கொள்ளும் உண்மை.

சைவத்தில் பிராமணனும் கிடையாது. மந்திரங்களும் முக்கிய மல்ல, மொழியும் முக்கியமல்ல!

பிராமண மதத்திலோ பிராமண மந்திர பூசைகளே முக்கியம். இந்தப் பூசைகளிலே பிராமணன் முக்கியம், அவனது ஆசாரம் முக்கியம்; மந்திரங்கள் முக்கியம், மந்திரங்கள் வடமொழியிலே இருக்கவேண்டியது முக்கியம், பிராமணன் செய்யும் கிரியைகள் முக்கியம் ..... இப்படி ஏகப்பட்ட நிபந்தனைகள்!

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதுதான் சைவம். பூசைக்கென்று ஒரு சாதியை வைத்து வளர்க்கவேண்டிய அவசியம் சைவத்தில் இல்லை. சாதிப் பிரிவினைகளே இல்லாத ஒரு சமூக அமைப்பிலும் சைவம் இருக்கமுடியும். சொல்லப் போனால் சைவத்தில் சாதிப் பிரிவினைகளே இல்லை.

பிராமண மதத்திலோ பிராமண மந்திர பூசைகளே முக்கியமாக இருக்கின்ற காரணத்தினாலே "பிராமணச் சாதி" என்று ஒரு சாதி இருக்கவேண்டியது அவசியமாகிறது. **சாதிப் பிரிவினைகளே இல்லாத ஒரு சமூக அமைப்பில் பிராமண மதத்துக்கு இடம் கிடையாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சைவம்' சொல்லும் 'பக்தி' நெறியிலே "இடைத்தரகர்" யாரும் கிடையாது. **"பக்தி" செய்யும்போது நேரடியாக இறைவனோடு தொடர்பு உண்டாகிறது!** அவ்வளவுதான்! கிறிஸ்தவ இஸ்லாமிய மதங்களிலும் இதே மாதிரித்தான்! "பக்தி" செய்தால் போதும்! இறைவனோடு நேரடியாகத் தொடர்பு ஏற்படும்!

ஆனால்——

பிராமண மதத்திலோ இப்படி அல்ல!

"நேரடியாக" இறைவனோடு தொடர்பு இல்லை! காஞ்சிப் பெரியவர் மிகத் தெளிவாகவே பிராமணமத சாஸ்திரம் சொல்லும் இக்கருத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார்! பிராமண மதத்திலே முதலில் 'பிராமணப் பூசாரி' ஒரு "இடைத்தரகன்!" அந்தப் பிராமணப் பூசாரி சொல்லுகின்ற "மந்திரங்கள்" அடுத்த "இடைத்தரகுகள்"! அவன் செய்கின்ற "கிரியைகள்" இன்னொரு "இடைத்தரகுகள்"! பிராமணப் பூசாரி சொல்லுகின்ற மந்திரங் களினாலும் செய்கின்ற கிரியைகளினாலும் வந்து நிற்கின்ற "தேவதா சக்திகள்" அடுத்த "இடைத் தரகுகள்!"

இந்தத் "தேவதா சக்திகள்" புரிந்துகொள்வதற்காகத்தான் வடமொழி தேவையாக இருக்கிறது. காஞ்சிப் பெரியவர் சொல்வதைக் கொஞ்சம் கவனமாகப் படித்துப் பாருங்கள்.

சைவம் சொல்லும் பக்தி நெறியிலே காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வழிபாடு செய்வது ஒன்றே முக்கியம்! கடவுளை நம்பிப் பக்தி செய்து "முழுமையாகச் சரணாகதி" அடைந்தால் கடவுளின் அருள் வெள்ளத்தில் மிதக்கலாம் என்பது சைவம்!

ஆசாரசீலனான பிராமணன் சாஸ்திர விதிகள் பிசகாமல் மந்திர பூசைகளைச் சரியாகச் செய்தால் போதும்! நன்மைகள் எல்லாமே வந்துசேரும் என்பது பிராமண மதம்!

இங்கே "பக்தி" என்ற சங்கதிக்கே இடமில்லை.

பிராமண மந்திர பூசைகள் சரியாக இருந்தால் நல்ல பலன் கிடைக்கும்! பிழையாக இருந்தால் கெட்ட பலன் வந்துசேரும்! அவ்வளவுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய காலத்திலே சில அரசர்களும், இந்தக் காலத்திலே சில மந்திரிகளும் பணம் படைத்தவர்களும் பிராமண மந்திர பூசைகளை விரும்புவதற்குக் காரணம் இதுதான்!

தாங்கள் அலுக்காமல் நலுங்காமல் இருந்துகொண்டு பணத்தைக் கொட்டிச் செலவழித்தால் போதும். பிராமணனைக் கொண்டு மந்திர பூசைகளைச் செய்வித்தால் போதும் ——

"நன்மை எல்லாம் வந்து சேரும்" என்று நம்புகிறார்கள்!

சைவம் சொல்லும் பக்தி நெறியிலே வழிபாடு செய்வதற்கு பணமோ பொருளோ பிராமணப் பூசாரி போன்ற பிறரின் உதவியோ தேவை இல்லை! "உள்ளக்கசிவு", "உணர்ந்து உணர்ந்து உருகுதல்" அது ஒன்றுதான் தேவை. சைவம் எல்லார்க்கும் ஏற்ற நெறி. பணக்காரன் ஏழை என்ற வேறுபாடு இல்லாத நெறி.

பிராமண மதமோ பணம் இல்லாவிட்டால் நடைபெறாது! பணம் பறிக்கும் மதம். பணக்காரன் ஏழை என்று வேறுபாடு காட்டும் மதம். ஒருவன் எவ்வளவு பணம் செலவழிக்கத் தயாராக இருக்கிறானோ அந்த அளவுக்குச் சடங்குகளை அதிகரித்து பணம் பறிக்கும் மதம்.

உயிர்க்கு உயிராக இருக்கும் இறைவனை நினைந்து நினைந்து அகம் குழைந்து பக்தி செய்யச் சொல்கிறது சைவம்! நமது அகத்தில் இருக்கும் சக்தியை – ஆன்மாவின் சக்தியை - இறைவனோடு இணைக்கும் வழியைச் சொல்கிறது சைவம்!

'பக்தி' என்பது அகச்செயல்! புறச்சக்திகளைப் பற்றி சைவம் கவலைப்படுவதில்லை.

பிராமண மதமோ நமக்கு வெளியே இருக்கும் புறச்சக்திகளான தேவதா சக்திகளைப் பிரீதிப்படுத்தி நன்மைகளைக் கொண்டுவர முடியும் என்கிறது. அதற்காகத்தான் பிராமணனும் மந்திரங்களும் வடமொழியும் கிரியைகளும் தேவையாக இருக்கின்றன.

சைவம் அகநோக்கு உடையது
பிராமண மதம் புறநோக்கு உடையது.

அகநோக்கும் புறநோக்கும் ஒரே நேரத்தில் செயல்பட முடியாது.

"வேயுறு தோளி பங்கனை" **உள்ளத்தில் இருத்தினால்** ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேதுக்கள் என்று சொல்லப்படுகின்ற 'நவக்கிரங்கள்' எல்லாமே நல்லவாகும் என்பது சைவம்! சம்பந்தர் தேவாரத்தைப் பார்த்தால் இது தெரியும்!

ஒவ்வொரு "கிரகத்துக்கும்" அர்ச்சனை செய்து அபிடேகம் செய்து விசேட பூசை செய்து வழிபாடு செய்தால் அவற்றின் தோஷம் போகும் என்பது பிராமணமதம்!

சைவத்தின் வழியே செல்லும்போது **எந்தவிதமான கெட்ட விளைவுகளும் வருவதற்கு வாய்ப்பே இல்லை.**

ஆனால் பிராமண மந்திர பூசைகள் அப்படி அல்ல.

**கெட்ட பலன்கள் வருவதற்கான வாய்ப்புகளும் நிறையவே இருக்கின்றன.**

பிராமணனின் ஆசாரம் முக்கியம். பிராமணமத சாஸ்திரங்கள் விதிக்கும் ஆசார விதிகளின்படி அவன் கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டும். மந்திரங்கள் சரியாக இருப்பது முக்கியம். சரியான மந்திரத்தைச் சரியான உச்சரிப்புடன் சொல்வது முக்கியம். உச்சரிப்புச் சரியாக இருந்தால் மட்டும் போதாது. அதனைச் சரியான ஏற்ற இறக்கங்களுடன் சொல்வதும் முக்கியம். பூசைகளைச் செய்கின்ற விதிமுறைகள் சாஸ்திரப் பிரகாரம் சரியாக இருக்கவேண்டியது முக்கியம். பூசைகளிலே பயன்படுத்து கின்ற திரவியங்கள் பொருட்கள் என்பவை சாஸ்திரத்தில் சொல்லிய வண்ணமே இருக்க வேண்டியது முக்கியம். கலப்படம் இருக்கக் கூடாது. இன்னும் ஏகப்பட்ட நிபந்தனைகள் இருக்கின்றன. இவை எல்லாமே சரியாக இருந்தால்தான் சரியான நல்ல பலன்கள் கிடைக்கும்.

அப்படி இல்லாமல் ஏதாவதொன்றில் எங்காவது ஒரு சிறு தவறு வந்துவிட்டாலும் போதும் - கவிழ்த்து விடும்!

கண்டிப்பாகக் கெட்ட பலன்தான், பெரிய நாசம்தான் வந்து சேரும்.

"பிராமண மந்திர பூசைகள்" என்பது கத்தி விளிம்பிலே நடப்பது மாதிரியான காரியம்! "கரணம் தப்பினால் மரணம்" என்ற மாதிரியான நடைமுறை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கரணம்' என்பது 'கிரியை'களுக்கு இன்னொரு பெயர், "கரணம் தப்பினால் மரணம்" என்ற பழமொழியே இதை விளக்குவதற்காக வந்ததுதான்!

கொல்லன் பட்டறையிலோ அல்லது ஒரு தொழிற்சாலை யிலோ அல்லது மின்சாரம் உற்பத்தி செய்யும் யந்திரத்திலோ பெரிய தவறு வந்துவிட்டால்கூட அதனால் பெரிய பாதகம் வந்துவிடாது.

ஆனால்,

"அணு சக்தி"யை தயாரிக்கும் அணு உலையிலே ஒரு சிறிய கசிவு வந்துவிட்டாலும் போதும் —

மிகப்பெரிய நாசம் அல்லவா வந்துவிடுகிறது!

"அணு சக்தி"யைவிட 'மந்திர சக்தி' ஆற்றல் மிக்கது என்பது பிராமணமத சாஸ்திரம்! அப்படித்தான் காஞ்சிப் பெரியவரும் சொல்கிறார்.

அப்படியானால் "அணு சக்தி"யைக் கையாள்வதை விட மிகப்பெரிய அவதானமும் பாதுகாப்பும் அல்லவா மந்திரங் களைக் கையாளும்போது கடைப்பிடிக்க வேண்டும்.

நமது கோயில் நடைமுறைகளையும், பிராமணன் வாழ்க்கை முறையையும் அவன் செய்யும் காரியங்களையும் கொஞ்சம் அவதானித்துப் பாருங்கள்! நடப்பது புரியும்! நாம் அடைந்துள்ள அவலங்களுக்கான காரணம் தெரியும்!

## (7) தடைசெய்யச் சட்டம் வேண்டுமா?

ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு காரணம் இருக்கிறது. காரணம் இன்றிக் காரியம் இல்லை. கொஞ்சம் பொறுமையாக நிதான மாகச் சிந்தித்துப் பாருங்கள்.

**பிராமணமத சாஸ்திரங்கள் சொல்லும்**
**உண்மைகளையும் பாருங்கள்**
**நாட்டில் நடப்பதையும் பாருங்கள்**
**காரண காரியத் தொடர்பு தெரிகிறதா**
**என்பதையும் பாருங்கள்**

அண்மையில் ஒரு சம்பவம் நடந்தது. புதிதாக ஒரு கோயில் கட்டினார்கள். இந்தியாவிலிருந்தெல்லாம் குருக்கள்மார் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பட்டார்கள். கோடிக் கணக்கான பணம் செலவு செய்து கும்பாபிஷேகம் நடந்தது.

அப்புறம் என்ன நடந்தது?

'சுனாமி' வந்தது.

கோயில் முழுவதும் அடித்துச் செல்லப்பட்டது. பல உயிர்களும் பலியாயின.

பலி ஆவதற்காகவே சென்றதுமாதிரி கும்பிடச் சென்ற வங்கி உத்தியோகத்தரும், பட்டதாரி ஆசிரியையான அவர் மனைவியும் அந்தச் சம்பவத்தில் உயிர் இழந்தார்கள்.

இது மட்டுமா? நாம் வாழும் பிரதேசம் எப்படி இருக்கிறது? நாம் எங்கே சென்று கொண்டு இருக்கிறோம்?

நாட்டிலே களவும் கொலையும் அளவின்றி வளர்ந்து வருகின்றன.

தெரு நாயைச் சுடுவதைப்போல மனிதர்கள் சுட்டுக்கொல்லப் படுகிறார்கள். கோயில்களுக்கு அண்மையிலும் கோயில் வீதிகளி லும்கூட சுடப்பட்ட பிணங்களைக் காண முடிகிறது.

வீடுகளிலும் களவு நடக்கிறது. கோயில்களிலும் களவு நடக்கிறது.

கலியாணம் வேண்டி கோயில் கோயிலாகச் சுற்றி வந்து எத்தனையோ அர்ச்சனைகள் அபிஷேகங்கள் செய்வித்த கன்னியர் பலர் முதிர்ந்து வாடி மனம் முறிந்து நிற்கின்றனர்.

குடும்பச் சண்டைகளும் அயலவர் பிணக்குகளும் அளவுக்கு மீறி அதிகரித்து அடிதடியாகி முடிகின்றன.

குடும்ப உறவுகள் சீர்கெட்டுக் கிடக்கின்றன.

காதலித்து பின்னர் அம்மி மிதித்து அருந்ததி பார்த்துப் பிராமண மந்திர பூசையுடன் அமர்க்களமாகக் கலியாணம் முடித்தவர் வாழ்க்கை நீதிமன்றப் படி ஏறி இறங்கும் வாழ்க்கை யாக முடிகிறது.

கோயில் பிரச்சினையே 'கோடு' ஏறுகிறது.

யாகங்கள் பல நடந்த கோயில்கள் பல பூட்டியே கிடக்கின்றன.

விளக்கு ஏற்றவும் ஆளின்றி பல கோயில்கள் பாழடைந்து பற்றைகள் வளர்ந்து கிடக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம் நடந்த கோயிலிலே கையோடு களவு நடக்கிறது.

கும்பாபிஷேகத்துக்கெனப் போடப்பட்ட தென்னங் கீற்றுக் கொட்டகை கும்பாபிஷேகம் முடிந்த உடனேயே பற்றி எரிகிறது. பலர் படுகாயப்படுகிறார்கள்.

கோயில் சந்திதானத்திலேயே கொடித்தம்பத்துக்கு அருகில் துப்பாக்கியால் சுடப்பட்டு ஒருவன் உயிர் பிரிகிறது.

கோயில் குருக்களே கருவறைக்குள் சுடப்பட்டுச் சாகடிக்கப் பட்ட நிகழ்ச்சியும் நடந்திருக்கிறது.

தேங்காய் எண்ணெய் என்ற நினைவோடு தீபத்தில் 'பெற்றோல்' ஊற்றிய 'குருக்கள்' உடல் கருகி உயிர்விட்ட செய்தியும் உண்டு.

இத்தனையும் இங்கே நடந்துள்ளன.

இன்னும் இப்படி எத்தனை எத்தனையோ நிகழ்வுகள்!

தீராத வியாதிகள், தீர்வே இல்லாத 'எயிட்ஸ்' புதுசு புதுசான புற்றுநோய்கள், தொல்லைக்குமேல் தொல்லை தரும். 'சிக்கின் குனியா', உயிர் பறிக்கும் 'டெங்கு', புதுப்புது வியாதிகள்!

போர் அழிவு, இடப்பெயர்வு, சொத்திழப்பு, கடும் வரட்சி, வெள்ள அனர்த்தம், சொல்லாமல் கொள்ளாமல் வந்து தாக்கும் சுனாமி, பொருளாதாரச் சீர்குலைவு, சிதைந்து கிடக்கும் கல்வி நிலையங்கள், சீரழிந்து கிடக்கும் தென்னந்தோட்டங்கள், தெலைந்து போன உறவுகள், எதிர்காலம் இருண்டு கிடக்கும் இளசுகள், தொடர்பு அறுந்த நட்புகள், தனிமையில் வாடும் முதியவர்கள், நிலைத்த சுகம்தராத திருமணங்கள், வெறுமையாகி விட்ட எதிர்காலம் என்று சொல்லிக்கொண்டே போகலாம்!

**எல்லாவற்றுக்கும் காரணம் என்ன?**

ஆசாரம் கெட்ட பிராமணன், தப்புத் தப்பாகச் சொல்லப்படும் மந்திரங்கள், கோளாறான கிரியை முறைகள் - இவைகள் எல்லாமே படுமோசமான விளைவுகளையே கொண்டுவரும் என்று சகல பிராமணமத சாஸ்திரங்களுமே சொல்லுகின்றன.

சொல்லிய வண்ணமே இங்கே எல்லாக்காரியங்களும் வந்து சம்பவிக்கின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் தப்பான பிராமண மந்திர பூசைகள் என்றால் ——

நாம் அனுபவிக்கும் அவலங்கள் அத்தனையும் அதன் காரியங்கள்!

இனியாவது பிராமண மந்திர பூசை விஷயங்களில் நாம் கொஞ்சம் விழிப்பாக இருக்க வேண்டாமா?

'ரேட்' பேசி 'சம்பளம்' பேசி பூசை செய்ய பிராமணன் கிளம்பிய உடனேயே அவனது "பிராமணத்துவம்" போய் விடுகிறது! அப்புறம் அவன் என்ன செய்தாலும் அது கெட்ட பலனைத்தான் தரும்! பிராமணனுக்கு 'தட்சணை' உண்டு. ஆனால் 'ரேட்' பேசி கூலி வாங்குவதை சாஸ்திரம் அனுமதிக்காது.

கோயில்களிலேயே முன்னர் நாட்டிய உபசாரம் நடப்பது வழக்கமாக இருந்தது. ஆனால் நடைமுறையில் இது ரொம்பவும் கெட்டுப்போய் தேசத்தின் ஒழுக்கத்தையே நாசம் பண்ணக்கூடிய தாக வந்து சேர்ந்தது. கடைசியில் அரசாங்கம் சட்டம் கொண்டு வந்துதான் இதை நிறுத்தவேண்டியது ஆயிற்று. காஞ்சிப் பெரியவரே இது பற்றிச் சொல்லியிருக்கிறார்.

**தண்டச் சோறுண்ணும் பார்ப்பான்**
**வயிற்றுப் பிழைப்புக்காக**
**முழுச் சமூகத்துக்குமே**
**கெடுதியைக் கொண்டுவரும் செயல்**
**சமய நடைமுறையாக இருக்கக்கூடாது.**

பிராமணமத சாஸ்திரம் சொன்ன நாட்டிய உபசாரத்தைத் தேசத்தின் ஒழுக்கத்தைக் காப்பதற்காக அரசாங்கம் தடை செய்தது போல ——

நாட்டு நலனையும் மக்கள் நலனையும் காப்பதற்காக அரசாங்கம் சட்டம் கொண்டு வந்துதான் கெட்டுப்போய் நிற்கும் பிராமண மந்திர பூசைகளையும் தடைசெய்ய வேண்டுமா?

அரசாங்கம் மத விஷயங்களில் தலையிடுவது நல்லதா என்ற கேள்வி வருகிறது. இது பற்றித் திருமூலர் சொல்லும் கருத்தைப் பார்ப்போம் -

**"மூடம் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்**
**வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்**
**பீடுஒன்று இலனாகும் ஆதலால் பேர்த்து உணர்ந்து**
**ஆடம்பர நூல்சிகை அறுத்தால் நன்றே"**

இது திருமந்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமை நீங்கப் பெறாதோர் குடுமி பூணூல் முதலிய வேடங்களை கொள்ளின் என்ன நடக்கும்?

புவியும் பெருவாழ்வு வாடும். நாடு நல்வாழ்வு கெட்டு நாச மாகும். அரசனுக்கும் எந்தவகையான பெருமையும் இருக்காது. ஆதலால், நன்கு ஆராய்ந்து ஆடம்பரமாக அணிந்திருக்கின்ற குடுமியையும் அரிந்து பூணூலையும் அரசன் அறுத்தானாயின் அது நல்லது!

இன்னும் இது போன்ற பாடல்கள் திருமந்திரத்தில் இருக் கின்றன.

மத விவகாரங்களில் அரசு தலையிடுவதை திருமூலர் ஆதரிப்பது தெளிவாகவே தெரிகிறது.

## (௪) இனிமேல் முடியாது

காலம் நிறையவே மாறிவிட்டது. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் நம்மைத் திகைக்க வைக்குமளவுக்கு நிறையவே மாற்றங்களைக் கொண்டு வந்துவிட்டன. உலகமே சுருங்கி விட்டது. கனடாவும், அமெரிக்காவும் நமக்கு அயல்வீடுகள் ஆகிவிட்டன.

தலைமுறை தலைமுறையாக மூன்று நான்கு தலை முறைகள் ஒரே கிராமத்தில் வாழ்ந்த நிலை போய்விட்டது.

தனது வாழ்நாளிலே ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் ஒருவன் வாழும் நிலை வந்துவிட்டது.

அயல்நாட்டுப் பொருள், அயல் நாட்டுமொழி, அயல் நாட்டுப் பழக்கவழக்கம், அயல் நாட்டு நாகரிகம் என்பன எப்போதை யும்விட இப்போது நம்மீது அதிகமாக ஆட்சி செய்கின்றன.

சினிமாவும் தொலைக்காட்சியும் தொலைபேசியும் இணையத் தளமும் உலகத்தையே நமது படுக்கை அறைக்குள்ளும் கொண்டு வந்து விட்டன.

கிராமம் நகரம் என்ற வேறுபாடும் வெகுவாகக் குறைந்து விட்டது.

குடியிருப்புக்கள் நெருக்கமாகிவிட்டன. பழையகாலத்திலே கிராம வாழ்க்கையிலே மக்கள் கலப்பு குறைவாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அந்தச் சாதியார் அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டு அவரவர் இடங்களிலே இருந்தார்கள்.

பிராமணன் மற்றவர்களுடன் அதிகம் கலந்து வாழாமல் தனித்து வாழ முடிந்தது.

அவனுக்குத் தனது ஆசாரத்தைப் பேணுவதும் எளிதாக இருந்தது.

இப்போது பிராமணனின் அயலவராக யார் யாரோவெல்லாம் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் இருக்கி றார்கள்.

பிராமணன் இப்போதும் தனக்கு விதிக்கப்பட்ட பழைய ஆசாரத்துடன் வாழமுடியும் என்று எதிர்பார்த்தால் அது நமது முட்டாள்தனம்!

பிராமணனே விரும்பினாலும்கூட பழைய ஆசாரத்தின்படி பிராமணமத சாஸ்திரங்கள் சொல்லுகின்ற ஆசாரத்தின்படி அவனால் வாழ முடியாது!

பெரிதாக மாறிவிட்ட சமூகச் சூழ்நிலை அதற்கு இடம் கொடுக்காது!

இதுதான் யதார்த்தம்!

ஆனால் -

ஆசாரத்தைக் கைவிட்ட பிராமணன் மந்திர பூசைகள் செய்வதை பிராமண மதம் ஏற்றுக்கொள்ளாது!

அவன் பூசைகள் செய்தால் -

விபரீத பலன்கள், கெட்ட பலன்கள், மோசமான விளைவுகள் என்பனவே வந்து சேரும்.

அப்படியானால் என்ன செய்வது?

பிராமண மந்திர பூசைகளையே கைவிட்டு விட வேண்டியது தான்!

வேறு வழியில்லை!

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் சொல்லவேண்டும்.

பலவிதமான மக்களுடனும் கலந்து பழகுவது, அயல் மொழிகளின் ஒலிகள் அடிக்கடி காதில் விழுவது, சினிமா தொலைக்காட்சி பார்ப்பது என்ற இந்தமாதிரியான இன்னும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்களினால் நாம் பேசும் மொழியின் அமைப்பு சொற்களை உச்சரிக்கும்முறை என்பவற்றிலே காலப்போக்கில் நிறைய மாற்றங்கள் வந்துவிடுகின்றன.

இந்த நியதிக்கு மந்திரங்களை உச்சரிக்கும் பிராமணப் பூசாரிகள் மட்டும் விதிவிலக்கு ஆகிவிட முடியாது.

இப்போதுள்ள நிலையில் எவ்வளவுதான் மெத்தப் படித்த மகாபண்டிதனாக இருந்தாலும்கூட மந்திரங்களைச் சரியான உச்சரிப்புடன் தொடர்ச்சியாகச் சொல்ல முடியாது.

ஆனால் —

மந்திர உச்சரிப்பிலே மாற்றங்கள் ஏற்படுவதை பிராமண மத சாஸ்திரங்கள் ஒருபோதுமே அனுமதிக்காது.

உச்சரிப்பிலே மாற்றங்கள் வரும்போது பலன்களும் விபரீதமாகி விடுகின்றன.

சப்த தோஷம் மிகப் பொல்லாதது!

நல்ல எண்ணங்களை மக்களின் மனதிலே ஏற்படுத்த வேண்டிய மந்திரங்கள் —

சலன மாற்றங்கள் அதிர்வலை மாற்றங்கள் என்பவற்றினால் ரொம்பவுமே தப்பான எண்ணங்கள் மக்கள் மத்தியிலே வளர்ந்து வீரியம் பெறுவதற்குக் காரணமாகி விடுகின்றன.

அப்படியானால் என்ன செய்வது?

பிராமண மந்திர பூசைகளையே கைவிட்டு விடவேண்டியது தான்!

வேறு வழியில்லை!

இனி, பூசைக்குரிய திரவியங்கள் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டும்.

பழைய காலத்திலே பூசைக்குரிய திரவியங்கள் பல சுத்தமாகவும் ஆசாரமாகவும் கிடைத்தன. நல்ல நெய், நல்ல தேன், நல்ல பால், நல்ல தயிர் என்பவை கிடைத்தன. இவை மட்டுமல்ல மற்றைய பொருட்களும் அப்படித்தான்.

பிராமண மந்திர பூசைக்குரிய திரவியங்களிலே கலப்படம் இருந்துவிட்டால் மோசமான படுமோசமான பலன்களே கிடைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். ஆச்சாரிய ஸ்வாமிகள் இதனைத் தெளிவாகவே சொல்லி யிருக்கிறார்.

இன்றைய நிலைமை என்ன?

பூசைக்குரிய திரவியங்களைக் கடைகளிலே வாங்கு கிறோம்.

சுத்தமான நெய்யும் சுத்தமான தேனுமா கடைகளிலே கிடைக்கிறது.

பால்மாவில் கரைத்த பாலும் தயிரும்கூட கோயில்களிலே பயன்படுத்தும் நிலை வந்துவிட்டது.

தெருவுக்குத்தெரு ஒன்பது கோயில்கள் என்ற ரீதியிலே கோயில்களைக் கட்டி வைத்துவிட்டு, அதுவும் போதாதென்று ஒவ்வொரு கோயிலிலேயும் சுற்றுப் பிரகாரங்களில் "சீசனுக்கு சீசன்" புதுப்புது குட்டிக் கோயில்களையும் கட்டி வைத்துக் கொண்டு சுத்தமான பூசைத் திரவியங்களுக்கு எங்கே போவது?

காசுக்கு வாங்கப்போனால் கலப்படப் பொருள் ஆசாரக் குறைவான பொருள்களே கிடைக்கும்!

பூசைகளின் பலன் எப்படி இருக்கும்?

துட்ட தேவதைகளே அட்டகாசமாகக் கொக்கரித்து கெட்ட பலன்களையே கொண்டுவந்து சேர்க்கும்!

இந்த முட்டாள்தனம் நமக்குத் தேவைதானா!

பல்வகைப் புகழ் அறங்கள் யாவையும் அழிப்பதோடு பாவமும் பழியும் நல்கும் சீர்கெட்ட நிலைக்கு அல்லவா பாதை மாறிய பிராமண மந்திர பூசைகள் வந்து நிற்கின்றன.

பிராமண மந்திர பூசைகளை எவ்வளவு விரைவாக நமது கோயில்களிலிருந்து நீக்குகிறோமோ அத்தனை விரைவாக நாடும் நலம் பெறும்! நமக்கும் சுகம் கிடைக்கும்!

## (௯) சேர்ந்தாரைக் கொல்லி

பக்குவமான பிராமண மந்திர பூசைகள் என்பதாக ஒன்று உண்டு.

பழுத்த ஆசாரசீலர்களான உத்தமமான பிராமணர்கள், வேத சாஸ்திரங்களிலே தோய்ந்து தோய்ந்து ஞானத்திலே உச்சநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்த பிராமணர்கள் —— இவர்கள் செய்யும் மந்திர பூசைகளைத் தான் பக்குவமான பிராமண மந்திர பூசைகள் என்று சொல்ல வேண்டும்.

இந்தப் பக்குவமான பிராமண மந்திர பூசைகளையே கூட அயல்வழக்கின் துறைவென்று தமிழ்வழக்கின் உயர்வு காட்டிய முன்னோரான நமது சமயச் சான்றோர் ஏற்றுக் கொள்ளவில்லை!

அப்படியிருக்க!

பாதைமாறிய இன்றைய கெட்ட பிராமண மந்திர பூசை களைப் பற்றி என்ன சொல்வது?

பிராமண மதத்துக்கு இன்னொரு பெயர் சொல்லி அழைப் பதனால் ——

"சேர்ந்தாரைக் கொல்லி" என்றுதான் சொல்ல வேண்டும்!

கொஞ்சம் நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தீர்களானால் இப்படிச் சொல்வதன் காரணம் புரியும்.

கணிதத்தில் Probability என்பதாக ஒன்று உண்டு. தமிழில் இதனை 'நிகழ்தகவு' என்கிறோம். "ஒரு நிகழ்வு நிகழ்வதற்கு எத்தனை சதவீதம் வாய்ப்பு உண்டு" என்பதை கணித்துச் சொல்வதுதான் இது!

பொருளியல், மருத்துவம், உளவியல், கல்வியியல், வங்கி யில் என்று எத்னையோ துறைகளில் இது பயன்பட்டு வருகிறது.

பிராமண மந்திர பூசை விஷயங்களிலும் இதனைப் பிரயோகித் துப் பார்க்கலாம்.

பிராமண மந்திர பூசைகளிலே நல்ல பலன் கிடைக்க வேண்டு மானால் எத்தனையோ விதிகளை, நிபந்தனைகளை கடைப்பிடித் தாக வேண்டும்.

ஆசார சுத்தமான பிராமணன், சரியான மந்திரங்கள், சரியான மந்திர உச்சரிப்பு, உச்சரிப்பின் போது சரியான ஏற்ற இறக்கம், சரியாகக் கடைப்பிடிக்க வேண்டிய கிரியாமுறைகள், பிராமணமத சாஸ்திரம் சொல்லுகின்ற பிரமாணத்துக்கமைந்த கலப்படம் இல்லாத பூசைப்பொருட்கள் - இப்படி எத்தனையோ காரியங்கள் இருக்கின்றன. இவற்றுக்குள்ளேயே பல உட்பிரிவுகளும் இருக் கின்றன. இவை எல்லாமே சரியாக இருந்தால்தான் சரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலன்கள் நல்ல பலன்கள் கிடைக்கும்! அப்போதுதான் நன்மை செய்யும் நல்ல தேவதா சக்திகள் திருப்திப்பட்டு நல்ல பலனைத் தரும்!

ஏதாவது ஒன்றிலே தப்பு வந்துவிட்டாலும் துட்ட தேவதைகளே மிகவும் வக்கிரமான முறையிலே கொட்டமடக்கத் தொடங்கி விடும். நமக்கும் கெட்ட பலன்களே வந்து சேரும்.

ஒரு கிணறு நிறைந்த தண்ணீரையே ஒரு துளி நஞ்சு நாசமாக்கிவிடும்.

அணு உலையிலே எந்த இடத்திலே கசிவு ஏற்பட்டாலும் நாடு முழுவதற்கும் நாசம்தான் வந்து சேரும்!

பிராமண மந்திர பூசை தொடர்பான சகல காரியங்களையுமே சீர்தூக்கிப் பாருங்கள்.

Probability முறைப்படி கொஞ்சம் ஆய்வுசெய்து பாருங்கள்! என்ன தெரிகிறது?

நல்ல பலன்கள் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் பெருமளவு குறைவாகவும்,

கெட்ட பலன்கள் கிடைப்பதற்கான வாய்ப்புக்களே மிக மிக அதிகமாக இருப்பதும் தெரிகிறது அல்லவா?

அதனால்தான் ——

'பிராமண மந்திர பூசைகளைச் "சேர்ந்தாரைக் கொல்லி" என்று அழைக்கவேண்டி இருக்கிறது.

இன்னுமொரு சங்கதியையும் பார்ப்போம் - சாதாரணமாக எந்தவிதமான தோஷங்களோ குறைபாடுகளோ இல்லாத ஒருவன் பிராமண மந்திர பூசைகளிலே நம்பிக்கை கொண்டு அடிக்கடி கோயிலுக்குப்போய் அப்பூசைகளிலே கலந்துகொள் கிறான் என்று வைத்துக்கொள்வோம்.

சாஸ்திரத்தின்படி **இரும்பினால்** செய்யப்பட்ட தீபம், கும்பம், கலசம், திருவாசி, அங்கி என்ற மாதிரியான பொருட்கள் கோயிலிலே இருக்கக்கூடாது. காஞ்சிப் பெரியவர் தெளிவாகவே சொல்லியிருக்கும் கருத்து இது.

அப்படியான பொருட்கள் இருந்தால் "சனி பீடை" வந்து சேரும் என்கிறார் காஞ்சிப் பெயரிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கோயில்களிலே ——

"இரும்பு" என்ற பெயருடன் வரக்கூடாத பொருட்கள் எல்லாம் "எவர் சில்வர்" என்ற பெயருடன் வந்து நிற்கின்றன.

"எவர் சில்வ"ரும் "இரும்பு"தான்!

சும்மா இருக்கமுடியாமல் கோயிலுக்குப்போய் "புண்ணியம்" சம்பாதிக்க நினைத்தவன் "சனி பீடை"யுடன் வீடு திரும்ப வேண்டி இருக்கிறது.

எப்படி இருக்கிறது "பிராமண மந்திர பூசை"களின் லட்சணம்?

"சேர்ந்தாரைக் கொல்லி" என்ற பெயர் பொருத்தமாகத் தானே இருக்கிறது!

"மைக்"கிலே மந்திரம் சொன்னால், கோயில் கருவறை உட்பட 'மின்சாரம்' இருந்தால், எத்தகைய கதிர்வீச்சு ஏற்படும்?

மந்திர உச்சரிப்பினால் உண்டாகும் அதிர்வலைகளின் சலனங் களை இவை பாதிக்காதா?

நன்மைதரும் தேவதா சக்திகளுக்கு இது உடன்பாடானதா?

கோயில்களிலே "தமிழ்" புகுவதற்கு அனுமதிக்காத சாஸ்திரங் கள் "மின்சாரம்" புகுவதற்கு மட்டும் அனுமதி அளிக்கின் றனவா?

இந்த மாதிரியான கேள்விகளுக்கெல்லாம் யார் பதிலளிக்க முடியும்? சாஸ்திரம் அனுமதிக்காத எதையும் கோயிலிலே செய்வதற்கு யார் அனுமதி கொடுத்தது?

"ஷோ" காட்டி வருமானம் தேடுவதற்காகவா கோயிலும் பூசைகளும்?

இந்தக் கோயிலிலே கும்பாபிஷேகம், அந்தக் கோயிலிலே லட்சார்ச்சனை, இன்னொரு கோயிலிலே சங்காபிஷேகம் என்று ஓடி ஓடி அலைகிறவர்கள் பலபேர் இருக்கிறார்கள். ஏகாதசி என்றும் பிரதோஷம் என்றும் வெள்ளி, செவ்வாய், சனி என்றும் ஒழுங்காக பிராமண மந்திர பூசைகளிலே பங்குபற்றுகிறவர்கள் இருக்கிறார்கள்.

இவர்களுக்குத் தெரியாத சங்கதி ஒன்று உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைபாடுகள் நிறைந்த பிராமண மந்திர பூசைகளிலே நிறையப் பங்குபற்றுகின்ற காரணத்தினாலே "மந்திரதோஷம்" என்பதாக ஒன்றுக்கு இவர்கள் ஆளாகி விடுகிறார்கள்.

"செவ்வாய் தோஷம்" "சனி தோஷம்" என்று ஏகப்பட்ட தோஷங்களைப் பற்றியெல்லாம் பிராமண மதம் சொல்கிறது.

இந்த தோஷங்களை எல்லாம்விட மிக மிக மோசமானது பெரிய ஆபத்தானது "மந்திர தோஷம்"!

குறைபாடுகள் பல நிறைந்த பிராமண மந்திர பூசைகளிலே பங்கு பற்றுவதனாலேயே இந்தப் பயங்கரமான "மந்திரதோஷம்" வருகிறது.

"மந்திர தோஷ"த்தினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு —

தொடர்ச்சியான மனக்கவலை தரும் படுபாதகமான நிகழ்ச்சி நடந்து விடுகிறது.

"மந்திரதோஷ"த்தினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு வருகின்ற தாக்கங்கள் வாழ்நாள் முழுவதையுமே பாதிக்கக் கூடியதாக இருக்கும்.

கலியாணம் நடைபெறாது இருத்தல், கலியாணத்தில் படுமோசமான ஏமாற்றத்துக்கு ஆளாகுதல், பிள்ளைப்பேறு இல்லாது போதல், தாம்பத்திய சுகம் இல்லாமை, வியாபாரம் ஒரே நிமிடத்தில் நொடித்துப் போகுதல், பெரும் பொருள் இழப்பு ஏற்படுதல், குடும்பத்தில் இளவயதினர் எதிர்பாராது மரணம் அடைதல், பல பிள்ளைகளைப் பெற்றிருந்தும் முதுமைக் காலத்தில் தனிமையில் வாடும் கொடுமை இன்னும் இப்படி எத்தனையோ எல்லாம் "மந்திர தோஷ"த்தினால் வரக்கூடிய ஆபத்துக்கள்!

உங்கள் அயலையும் சுற்றத்தையும் கொஞ்சம் அவதானித்துப் பார்த்தீர்களானால் இந்த உண்மை தெளிவாகவே புரியும்!

## (10) சார்ந்தாரைக் காக்கும் நெறி

சைவநெறி என்பது பக்திநெறி. இது தமிழர் நெறி. தென்னாட்டில் தோன்றி வளர்ந்த நெறி. இது அன்பு நெறி. இது அறிவு நெறியுமாம்!

சைவநெறிக்கு இன்னொரு பெயரிட்டு அழைப்பதனால் "சார்ந்தாரைக் காக்கும் நெறி" என்று அழைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பக்திநெறியில் எந்தவிதமான**
**கெட்ட பலன்களும் வருவதற்கு**
**வாய்ப்பே இல்லை.**

"பிராமண மந்திர பூசை"களை வைரத்துக்கு ஒப்பிட்டால் "பக்திநெறி"யை தங்கத்துக்கு ஒப்பிடலாம்.

வைரத்திலே தோஷமுள்ள வைரங்களும் உண்டு. தோஷம் இல்லாத வைரங்களும் உண்டு.

"வைர தோஷம்" மிகவும் பொல்லாதது.

ஆளைப் பாடாய்ப்படுத்தி விடும். அரசனையும் ஆண்டி ஆக்கி விடும்.

தங்கம் அப்படி அல்ல.

தங்கத்திலே தோஷமுள்ள தங்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. எல்லாமே நல்ல தங்கம்தான்!

"பிராமண மந்திர பூசை"களிலே தோஷம் வந்து ஆட்களை கெடுக்கும் வாய்ப்பு உண்டு என்றாலும் இன்றுள்ள நிலையில் பாதை மாறிய கெட்டுப்போன பிராமண மந்திர பூசைகள் எல்லாமே அவலங்களையும் ஆபத்துக்களையும் கொண்டு வருவனவாகவே இருக்கின்றன.

அவலங்களையும் ஆபத்துக்களையும் கொண்டு வருகின்ற இந்தப் பிராமண மந்திர பூசைள் நமக்குத் தேவைதானா?

ஆபத்தே இல்லாத நன்மை ஒன்றையே தருகின்ற "பக்தி நெறி"யே நமக்குப் போதும்.

"பிராமணன்" "மந்திரங்கள்" "கிரியா முறைகள்" "பூசைத் திரவியங்கள்" தேவதா சக்திகள்" என்ற எந்தவிதமான இடைத் தரகுகளும் இல்லாத வழிபாட்டுநெறிதான் பக்திநெறி.

நேரடியாக இறைவனுடன் தொடர்புகொள்ளும் முறை தான் பக்திநெறி.

"தேவதா சக்தி"களுக்கு தேவபாஷை எனப்படும் வடமொழி மட்டுமேதான் புரியும் என்ற காரணத்தினாலே தான் "செத்த மொழி"யைக் கோயில்களிலே கட்டி அழ வேண்டி இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கு எல்லா மொழியும் புரியும். எந்த மொழியில் வேண்டுமானாலும் பக்தி செய்யலாம்.

பக்திநெறியில் ஒழுகுவதற்கு வடமொழி தேவையே இல்லை! பிராமணனும் தேவை இல்லை!

தேவாரம், திருவாசகம் மற்றும் திருமுறைகள், திருப்புகழ், திருமுருகாற்றுப்படை என்ற இவையே போதும்.

தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும் ஆழத்திலும் பரப்பிலும் நிகரற்ற இலக்கியம் வேறு எந்த மொழியிலுமே இல்லை.

தமிழ் பக்தியின் மொழி.

நவில்தொறும் நூல் நயத்திற்கு எடுத்துக் காட்டாகவும் கற்றனைத்தூறும் அறிவிற்கு ஒரு சான்றாகவும் விளங்குபவை நமது சமய நூல்களான திருமுறைகள்!

அத்திருமுறைகள் பக்திநெறியைத் தவிர வேறு எந்த நெறியையுமே ஏற்றுக்கொள்ளவும் இல்லை; நமக்குப் போதிக்கவும் இல்லை.

வண்தமிழ் செய் தவம் நிரம்ப, திசை அனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேற, தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல தமிழ் செய்து வழிகாட்டிய அருளாளர்கள் பலரை நமது முன்னோராக நாம் பெற்றிருக்கிறோம்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், ஆரூரன், மாணிக்கவாசகர், காரைக்கால் அம்மையார், ஔவையார், திருமூலர், பட்டினத்தார், சேக்கிழார், அருணகிரிநாதர், குமரகுருபரர், ஆழ்வார்கள், ஆண்டாள், பாரதியார்.... இது மிக நீண்ட தொரு வரிசை.

இவர்கள் கண்டு போற்றிய நெறிதான் பக்திநெறி.

குளத்தங்கரைப் பிள்ளையார், மடத்தடி வைரவர், இலுப்பையடி வீரபத்திரர், கேணியடிக் காளியம்மன், வேம்படி வைரவசாமி, .... என்று இப்படிப்பட்ட எத்தனையோ இடங்களில் பக்திநெறி வழிபாடுதான் நடக்கிறது.

வருமானம் இல்லாத எல்லாச் சின்னக் கோயில்களிலுமே 'பக்தி நெறி' வழிபாடுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் கிடைக்கிற இடங்களிலேதான் பிராமண மந்திர பூசைகள் மெல்ல வந்து புகுந்து விடுவது வழக்கம்!

"செக்"க்குப் பூசை செய்வார் செக்குக்கும் பூசை செய்வார்.

சாராயக் கடையிலும் சாந்தியும் பூசையும் செய்ய வரிசையில் வந்து நிற்கிற பிராமணர் பலர் இருக்கிறார்!

பல வருடங்களுக்கு முன்னர் சிறியதாக இருந்த கோயில்கள் பலவற்றிலே "பக்திநெறி" வழிபாடு மட்டுமேதான் இருந்தது.

கள்ளம் கபடு சூது வாது தெரியாத கிராமத்து மக்கள் பலர் இப்போதும்கூட இப்படியான இடங்களிலேதான் மிகவும் பயபக்தியுடன் வழிபாடு செய்து வருகிறார்கள்.

இப்படியாக இருந்த பல இடங்களைத்தான் "படிப்பும் அறிவும்" நமக்கு வந்துவிட்டதாகக் கருதியும் "நாகரிகம்" "முன்னேற்றம்" என்ற தப்புத் தப்பான நினைவுகளோடும் "பிராமண மந்திர பூசை" இடங்களாக மாற்றி வைத்திருக்கிறோம்.

"பொன் அடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும் நின் அடியார்"

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்"

"போதொடு நீர் சுமந்து ஏத்தி புகுவார் அவர் பின் புகுவேன்"

—— இந்த மாதிரியான ஏராளமான திருமுறைப் பாடல் வரிகள் வேறொரு வகையான வழிபாட்டு முறையை நமக்கு நினைவூட்ட வில்லையா?

நன்றாக நினைவில் வைத்துக்கொகள்ளுங்கள் ——

**"திருமுறை" தந்த பெருமக்கள் யாருமே "பக்திநெறி" யைத் தவிர வேறு எந்த நெறியையுமே போற்றிப் பாடவில்லை.**

அப்படியிருக்க ——

நாம் மட்டும் "பக்திநெறி" யை விட்டு விலகி கெட்ட பலன்களே வந்து விளைவதற்குக் காரணமாக உள்ள "பிராமண மந்திர பூசை" நெறியின் பின் செல்லவேண்டிய அவசியம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மந்திர தோஷ"த்தால் பாழான பலரின் வாழ்க்கையைப் பார்த்தாவது நாம் திருந்த வேண்டாமா?

## (11) பக்தியின் பலன் நமக்குக் கிடைக்காதா?

பிராமணனின் ஆசாரம் எப்படி வேண்டுமானாலும் இருந்து தொலைக்கட்டும். அவன் என்ன மந்திரத்தை வேண்டுமானாலும் சொல்லட்டும். அது எந்த மொழியில் இருந்தாலும் பரவாயில்லை. எவ்வளவு தப்பும் தவறுமாகச் சொல்லப்பட்டாலும் பரவாயில்லை. கிரியைகளிலே எத்தனை கோணல் மாணல் வேண்டுமானாலும் இருக்கட்டும்.

நாம் அந்தப் பூசைகளிலே பங்குகொண்டு மனப்பூர்வமாகப் பக்தி செய்கிறோமே —

அந்த பக்திக்குப் பலன் கிடைக்காதா என்று கேட்கலாம்.

நிறையப் பேர் இப்படித்தான் கேட்கிறார்கள்.

பிராமணன் செய்யும் பாவத்தின் பலன் அவனுக்கு நாம் செய்யும் பக்தியின் பலன் நமக்கு என்று சொல்லுகிறார்கள்.

கண்டிப்பாக இது தப்பான கருத்து.

நமது சமய நூல்கள் ஒப்புக்கொள்ளாத கருத்து.

அந்த பக்திக்கு பலன் கிடைக்காது.

நமது சைவசமய நூல்கள் ஒரு உண்மையை மிகத் தெளிவாகச் சொல்லுகின்றன.

"பக்தி" என்பது பூரண சரணாகதி.

வேறு ஒன்றையும் பற்றாது இறைவனை மட்டுமே பற்றி நிற்கும் நிலை.

இரண்டு தோணியிலே கால் வைக்க முடியாது.

"பிராமண மந்திர பூசை"களின்போது நேரடியாக நாம் கடவுளை வழிபடுவது கிடையாது. "வழிபாடு நேராக அல்ல" என்று காஞ்சிப் பெரியவர் மிகவும் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்.

பிராமணன், அவனது ஆசாரம், மந்திரம், அவற்றின் உச்சரிப்பு, கிரியா பொருட்கள், கிரியா முறைகள் என்று எத்தனையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயங்களில் நம்பிக்கைகொண்டு அவற்றின் ஊடாக பல்வேறு தேவதா சக்திகளைப் பிரீதி செய்வதே இந்த வழிபாட்டு முறை யின் நோக்கமாக இருக்கிறது.

வேறு பலவற்றில் நம்பிக்கை கொண்டு நிற்பதோடு இறை அருளையும் வேண்டி நிற்கிறோம்.

இப்படிச் செய்யும்போது நமது பக்தி முழுமையான சரணாகதி அல்ல!

"முழுமையான சரணாகதி" இல்லை எனில் அது 'பக்தி' அல்ல!

'பக்தி'யை விளக்க பாரதத்திலே ஒரு கதை இருக்கிறது. எல்லாருக்கும் தெரிந்த கதை அது.

எல்லாருக்கும் தெரிந்த மிகவும் எளிமையான கதையாக இருக்கின்ற காரணத்தினாலேயே ——

அந்தக் கதையின் அடிப்படையான அற்புதமான தத்துவக் கருத்தை நாம் கவனிக்கத் தவறி விடுகிறோம்.

பல பெரியோரும் கூடியிருக்கின்ற துரியோதனன் அரச அவையிலே பாண்டவர் பத்தினியான திரௌபதியின் துகிலைத் துச்சாதனன் உரிகிறான்.

"பொய்த்த இந்திரசாலம் நிகர் பூசையும் கிரியையும் புலைநடையும் கைத்திடு பொய்ம்மொழியும் கொண்டு கண் மயக்கால் பிழைப்போர் பலர்" அந்த நாட்டிலே இருந்த காரணத்தினாலேதான் ——

அரச அவையிலே திரௌபதியின் துகில் உரியப்படும் நிலை வந்தது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று!

திரௌபதி தனது மானத்தைக் காக்க முனைகிறாள். தனது கைகளால் சேலையை இறுகப் பிடித்துக்கொள்கிறாள். கண்ண பிரானைக் கூவி அழைக்கிறாள்.

கண்ணன் அருள் செய்யவில்லை.

திரௌபதியின் மானமோ போய்க்கொண்டு இருக்கிறது.

திடீரென்று திரௌபதியின் சிந்தையிலும் செயலிலும் மாற்றம் வருகிறது! புதிய நம்பிக்கை பிறக்கிறது!

சேலையைப் பிடித்திருந்த கைகளை எடுத்து விடுகிறாள்.

இரு கரங்களையும் கூப்பியபடி கண்ணனை அழைக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தை மறந்து ஒருமையுற்று உட்சோதியிற் கலக்கிறாள். தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள். தலைவன் தாளே தலைப்பட்டாள்.

"கண்ணா! அபயம் உனக்கு அபயம்!" என்று ஓலமிட்டுப் பிரார்த்திக்கிறாள்.

அற்புதம் நிகழ்கிறது.

கண்ணபிரான் அருளால் அவள் துகில் வளர்கிறது.

துச்சாதனன் கழற்றிட கழற்றிட துணி புதிது புதிதாய் வண்ண வண்ண பொற்சேலையாக வளர்ந்து கொண்டே போகிறது.

துச்சாதனன் அலுத்துக் களைத்துக் கீழே விழுகிறான்.

திரௌபதியின் பக்தி நிறைந்த குரலுக்கு கண்ணன் அருள் கிடைக்கிறது.

திரௌபதி ——

தனது கைகளை நம்பிக்கொண்டு கடவுளையும் நம்பிய போது கடவுளின் அருள் கிடைக்கவில்லை.

தனது கைகளை நம்பாமல் கடவுளை மட்டுமே நம்பிய போது தான் கடவுள் அருள் கிடைத்தது.

இதுதான் பக்தியின் தனித்துவமான லட்சணம்!

நமது சைவ நூல்கள் மிகவும் தெளிவாகவே கூறும் செய்தி –

இறைவன் ——

"நிறுத்துவதோர் குணமில்லான்"

"ஓடி மிள்கென ஆடல் பார்த்திருப்பவன்"

ஆன்மாக்கள் செய்யும் எந்தக் காரியத்தையும் நிறுத்தும் குணம் இறைவனிடம் இல்லை. அவரவர் வழி செல்ல விட்டு விடுவான்.

ஊழ்வினைப்படியே கருமங்கள் நடைபெறும்.

அவரவர் விதி வழியே அவரவர் இறையவர் அமைவர்.

அவரவர் விதிவழியே அவரவர் வழிபாட்டு முறைகளும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஞ்சநேயரிடமும் ஓடச் சொல்லும். துர்க்கையின்மீதும் மோகம் வரும். சத்தியசாயி பாபாவின் சித்துக்களிலும் சிந்தனை பறிபோகும். மடு மாதாவையும் தேடிப் போகும் நிலை வரும். பிராமணப் பூசாரிகளின் சாந்தி பூசைகளிலும் நூல்கட்டும் வியாபாரத்திலும் மயங்கி நிற்கும் நிலையும் வரும்.

எதில் நம்பிக்கை பிறக்கிறதோ அந்த நம்பிக்கையால் வரும் பயன் மட்டுமே கிடைக்கும்.

பிராமண மந்திர பூசைகளில் நம்பிக்கை கொண்டால், அந்த நம்பிக்கைக்குரிய பலனைத்தான் இறைவன் கொடுப்பான். பிராமண மந்திர பூசைகளினால் வரும் பலன் மட்டும் கிடைக் கும். அவை நல்லவையாகவும், இருக்கலாம், கெட்டவையாக வும் இருக்கலாம்.

திரௌபதி கைகளால் சேலையைப் பிடித்தபடி கண்ணனை அழைத்தது போன்றதுதான் பிராமண மந்திர பூசைகளை நம்பிக் கொண்டு பக்தி செய்வது!

பிராமண மந்திர பூசைகள் சரியானவையாக இருந்தால் நல்ல பலனும், அவை தப்பானவையாக இருந்தால் கெட்ட பலனும் தப்பாமல் வந்து சேரும்!

அவ்வளவுதான்.

நினைவில் கொள்ளவேண்டிய இன்னொரு உண்மை —

இறைவன் —

''ஓடி மீள்கென ஆடல் பார்த்திருப்பவன்''

ஆன்மாக்கள் ஓடுமட்டும் ஓடட்டும் என்று சொல்லி ஆன்மாக் களின் ஆட்டத்தை எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பான் இறைவன்!

''ஆடல்'' என்பதற்கு இங்கு இரண்டு பொருள் உண்டு. ஒன்று ஆட்டம் என்ற ஆடல்! மற்றது ஆள்தல் என்பது; ஆட்கொள்வது!

ஓடு மட்டும் ஓடி எத்தனையோ வம்பு தும்புகளை எல்லாம் செய்து எத்தனையோ வழிபாட்டு முறைகளை எல்லாம் மேற் கொண்டு அலுத்துக் களைத்து கடைசியில் இறைவனின் பாதமே சரண் என்று கருதி அவனிடமே ஆன்மாக்கள் மீளுமட்டும் இறைவன் பொறுமையாகக் காத்திருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அருளாலே அவன் தாள் வணங்கும் நிலை வந்தபோது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அவனையே நினைந்து நினைந்து உருகும்போது அவனது அருள் ——

வெள்ளமாகப் பாயத் தொடங்கும்!

குற்றம் குறை ஏதுமில்லாத ஒரு இளம் பெண் தனது உயிருக்கு உயிரான காதலனையே நினைந்து நினைந்து எவ்வாறு ஏங்குவாளோ ——

அந்த மாதிரி பக்தன் ஒருவன் இறைவனையே நினைந்து நினைந்து உருக வேண்டும்.

ஓடுமட்டும் ஓடி மீண்ட பின்தான் இறைவன் ஆள்தலைச் செய்வான்.

பிராமண மந்திர பூசைகளிலே நம்பிக்கை கொண்டு அதன் வழியே நாம் செல்லும்போது அந்தப் பூசைகளினாலே வரும் விளைவுகளை மட்டுமேதான் நாம் இறைவனிடமிருந்து பெற முடியும்! அதைத்தான் இறைவன் நமக்குத் தருவான்!

பிராமண மந்திர பூசைகள் சரியாக இருந்தால் நல்ல பலன் களையும், அவை தப்பும் தவறும் நிறைந்தவையாக இருந்தால் கெட்ட பலன்களையும் நாம் பெற்றேதான் தீரவேண்டும்!

காரண காரியத் தொடர்பான நியதி அது!

நாம் செய்யும் 'பக்தி'க்கு அங்கே பலன் கிடைக்காது! ஏனெனில் அது "பூரண சரணாகதி" அல்ல!

பிராமண மந்திர பூசைகளில் நாம் கொண்டுள்ள நம்பிக்கை நாம் செய்யும் பக்திக்குத் தடையாக இருப்பது விளங்குகிறது அல்லவா?



சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாமிஜி

## எழுதிய வேறு சில நூல்கள்

## இது இந்துமதம்

விற்பனையில் சாதனை செய்த நூல். "சைவத்தின் மேன்மையும் அதன் வரைவிலக்கணமும் சிந்தனையைத் தூண்டுவன வாயுள்ளன. சாமிஜியின் சிந்தனை வேகத்துக்கு ஈடுகொடுக்கும் வீறார்ந்த உரைநடை நூலை ஒரே மூச்சில் படித்து முடிக்கத் தூண்டுகிறது" என்று "மூதறிஞர் சொக்கன்" அவர்களால் பாராட்டப்பட்ட நூல். இரண்டாம் பதிப்பு விரைவில் வெளிவரும்.

## இருபத்தியோராம் நூற்றாண்டு சவால்களைச் சந்திக்க

சிந்திக்க வைத்த பிரசுரம். ஆங்கிலக் கல்வி, கணனிக்கல்வி என்பவற்றின் முக்கியத்துவத்தை பல வருடங்களுக்கு முன்னரே விளக்கி தமிழ் இளைஞர்களுக்கு உற்சாகமூட்டி வழிகாட்டிய நூல்.

## கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்

"சைவம் வீறுடன் எழுந்து விரைந்து வளரவும் உலகமெலாம் தமிழ் பரவி நிலைத்து நிற்கவும் கோயில் பூசைகள் அனைத்தும் உடனே தமிழாக வேண்டும்" என்ற கருத்தை அழகாகவும் தெளிவாகவும் விளக்கும் நூல். இப்பொழுது விற்பனையாகிறது.

## மனிதர்களின் தேவைகள்

மனிதர்களின் நடத்தைகளுக்குக் காரணம் அவர்களின் தேவைகள்.

"சாமிஜி சற்று வித்தியாசமான எழுத்தாளர். புதிதாகவும் புதுமையாகவும் சிந்தித்து கவர்ச்சிகரமாக எழுதுகிற ஒரு சிறந்த எழுத்தாளர்" என்று ஈழத்தின் மூத்த எழுத்தாளர் 'வரதர்' அவர்களால் பாராட்டப்பட்டு அவரது 'வரதர் வெளியீ'டாகவே வெளிவந்துள்ள நூல். இப்பொழுது விற்பனையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DANGER

# பிராமண

# மந்திர பூசைகள்

# சாமிஜி

காஞ்சிப்பெரியவர்
ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
கருத்துக்களுடன்

Rs. 150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org